04.01.16

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பனிப்பொழிவால் வெற்றிலை விலை உயர்வு

உத்தமபாளையம்:கடும் பனிப்பொழிவால் மார்க்கெட்டிற்கு வெற்றிலை வரத்து குறைந்ததால், அதன் விலை உயர்ந்தது.தேனிமாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும்பனிப்பொழிவு இருப்பதால் கம்பம், சின்னமனுார், சில்வார்பட்டி, தேவதானப்பட்டி, பெரியகுளம், ஜெயமங்களம், மேல்மங்களம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலைக் கொடிக்கால்களில் வெற்றிலை சாகுபடி பாதிப்படைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு அதன்வரத்து குறையத் துவங்கி, விலை உயர்ந்து வருகிறது.உத்தமபாளையம் வெற்றிலை வியாபாரி ஆண்டி கூறுகையில், “ பனிப்பொழிவால் வெற்றிலை வரத்து குறைந்துள்ளது. கருப்பு வெற்றிலை கிலோவிற்கு ரூ. 110, வெள்ளை வெற்றிலை கிலோவிற்கு ரூ. 140 வரை விற்பனையாகிறது. கிலோவிற்கு சராசரியாக ரூ. 10 முதல் 20 வரை உயர்ந்துள்ளது. இதுமேலும் உயர வாய்ப்புள்ளது,”என்றார்.

## கேரட் வரத்து குறைவு விலை திடீர் அதிகரிப்பு

ஊட்டி:நீலகிரியில், கேரட் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டம், ஊட்டியில் விளையும் கேரட்டுக்கு மேட்டுப்பாளையம், சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளில் மவுசு அதிகம். இதன் விலை, சில நாட்களாக உயர்ந்துள்ளது. ஊட்டி மார்க்கெட் காய்கறி ஏலத்தில், 40 கிலோ கேரட் மூட்டை, 1,800 -முதல் 2,000 ரூபாய் வரை விலை போகிறது; அதன்படி, ஒரு கிலோ, 45 முதல்- 50 ரூபாய் வரை

விற்கப்படுகிறது. வெளிக்கடைகளில், கிலோ, 90- முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கடந்தாண்டு, இதே காலத்தில், ஒரு மூட்டை, 40 கிலோ, 500 முதல்-, 700 ரூபாய் வரை மட்டுமே விற்கப்பட்டது; வெளிச்சந்தையில், கிலோ, 30- முதல் 35 ரூபாய் வரை விற்கப்பட்டது. பெங்களூரு, மைசூருவிலும் மழை பெய்ததால், அங்கு ஏற்பட்ட மகசூல் குறைவால், கேரட் வரத்து கணிசமாக குறைந்தது. விலையேற்றத்துக்கு, இதுவே காரணம். ராஜா முகமது, ஊட்டி நகராட்சி மார்க்கெட், காய்கறி மொத்த வியாபாரி

**வரத்து குறைவால் காய்கறிகளின் விலை கிடு கிடு! அசைவத்திற்கு மாறும் நடுத்தர வர்க்கம்**



கடலூார்: கனமழையால் பாதிக்கப்பட்ட கடலூார் மாவட்டத்தில் காய்கறிகளின் விலை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்து வருவதால் நடுத்தர வர்க்கத்தினர் அவதிக்குள்ளாகி வருகின்றனர். தமிழகத்தில் பல மாவட்டங்களில் காய்கறிகள் விளைவிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன. பருவமழைக்கேற்ப அந்தந்த பகுதிகளில் காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. வடகிழக்குப் பருவ மழையினால் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ததால் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூார், நெல்லை மற்றும் துாத்துக்குடி, நெல்லை போன்ற மாவட்டங்களில் காய்கறி பயிர்கள்

அடியோடு அழிந்தன. இதன் காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்துதான் தேவையான காய்கறிகளை வாங்க முடியும் என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. சேலம், ஈரோடு, கோவை, சத்தியமங்கலம் போன்ற மலையடிவார பகுதிகளில் மழை குறைவாலும், தண்ணீர் தேங்கி நிற்காததாலும் காய்கறி செடிகள் விளைந்து விவசாயிகளுக்கு பலனை கொடுக்கின்றன.

**தேர்தல் காற்று! விவசாயத்துக்கு சாதகமாக வீசும்? புத்தாண்டில் புது நம்பிக்கை**



கோவை: கோவை மாவட்டத்தில், கடந்தாண்டு மழை பொழிவும் குறைவு, விவசாயத்திலும் ஏகப்பட்ட பிரச்னைகள். புத்தாண்டு துவங்கியுள்ள நிலையில், இந்தாண்டு தேர்தல் ஆண்டாக இருப்பதால், விவசாய பிரச்னைக்கு தீர்வு கிடைக்குமென,புது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தொழில்துறை, விவசாயம் இரண்டும் கோவை மாவட்டத்தில் இரு கண்களாக உள்ளன. வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை கோவைக்கு கை கொடுக்கிறது. கோவையின் மேற்கில் துவங்கி, கிழக்கு நோக்கி செல்லும் நொய்யல் படுகையிலும்; மாவட்டத்தின் தெற்கு பகுதியில் ஆழியாறு, பாலாறு படுகையிலும் விவசாயம் செழிப்பாக உள்ளது. மலையோர கிராமங்களில் யானை, காட்டுப்பன்றி போன்ற வனவிலங்குகளால் விவசாய பயிர்கள் சேதமடைந்தது, கடந்தாண்டு அதிகம். பயிர்கள் சேதமடைந்ததற்கு ஏற்ப, விவசாயிகளுக்கு இழப்பீடு

கிடைக்கவில்லை. யானை தாக்கி, விவசாயிகளும், வனத்துறை ஊழியரும் உயிரிழந்த துயர சுவடுகளுக்கு குறைவில்லை. மாவட்டத்தின் பிரதான விவசாயம் தென்னை சாகுபடி. தேங்காய் விலை ஏற்ற இறக்கத்தால், பெரும் பாதிப்பை விவசாயிகள் சந்தித்தனர். மானாவாரி, கிணற்று பாசன விவசாயி கள் தக்காளி சாகுபடியில் கவனம் செலுத்துகின்றனர். ஆனால், தக்காளி சாகுபடி, விவசாயிகளை சாறு பிழிந்து விட்டது. கடந்த ஆண்டில், ஒரு கிலோ தக்காளி, 2 ரூபாய்க்கும் விற்றது; 40 ரூபாய்க்கும். எகிறியது. விலை உயர்ந்த காலத்தில், சாகுபடி இல்லை. கோவையில் கறவை பசு வளர்ப்பு அதிகமுள்ளது. பால் விலை, கொள்முதல் மறுப்பு போன்றவை பால் உற்பத்தியாளர்களை புரட்டிப் போட்டது. மத்திய அரசு, பால் பொருட்களுக்கான இறக்குமதி வரியை குறைத்ததால், வெளிநாடுகளில் இருந்து பால் பவுடர் இறக்குமதி அதிகரித்தது.

இதனால், உள்நாட்டு பால் பவுடர் தேக்கமடைந்ததால், தனியார் நிறுவனங்கள் பால் கொள்முதலை குறைந்தன. இதன் காரணமாக, 'ஆவின்' நிறுவனத்தில், பால் கொள்முதல் அதிகரித்தது. ஆவின் நிர்வாகமும் பால் கொள்முதல் அளவை குறைத்ததால், விவசாயிகள் ரோட்டில் பாலை ஊற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், அரசு பால் கொள்முதல் விலை உயர்வும் விவசாயிகளுக்கு நேரடியாக பலனளிக்கவில்லை. இந்தாண்டு, சட்டசபை, உள்ளாட்சி தேர்தல் நடக்கவுள்ளதால், விவசாயிகளை குளிர்விக்க, இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான அறிவிப்புகள் வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் மேலோங்கியுள்ளது.

**'உற்பத்திக்கு ஏற்ற விலை'**

விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் கந்தசாமி கூறுகையில், "விவசாயிகளிடம் தேங்காய் கொள்முதல் செய்து, கொப்பரையாக மாற்றி, தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து, பொதுவினியோக திட்டத்தில் விற்பனை செய்ய, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பால், தக்காளி, காய்கறி, சிறுதானிய விவசாயிகளை பாதுகாக்க, உற்பத்தி செலவுக்கு ஏற்ப, விலை நிர்ணயம் செய்யும் திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்.

பயிர்களை சேதப்படுத்தும், யானை, காட்டுப்பன்றி, மயில் பிரச்னைக்கு தீர்வு காண, மத்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும்," என்றார்.

**கார்போக சாகுபடி தள்ளிப்போகும் அபாயம் நிலத்தை தயார் செய்யும் விவசாயிகள் குழப்பம்**

ஊட்டி: நீலகிரியில், கடும் பனிப்பொழிவு நீடித்தால், கார்போக சாகுபடியும் தள்ளிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நீலகிரியில், பொதுவாக, நவம்பர் இரண்டாம் வாரத்தில் பனிக்காலம் துவங்கி, டிசம்பர் மாதம், பனிப் பொழிவு தீவிரமடையும்; ஜனவரி இரண்டாம் வாரத்தில் பனியின் தாக்கம் குறையும்.

பனியை எதிர்பார்த்து மலை பகுதிகளில், காரட், பீட்ரூட் சாகுபடி செய்யப்படும் நிலங்களில், பனி விழுவதன் மூலம், மண்ணில், பயிர்களை தாக்கும் புழு, பூச்சிகள் செத்து மடியும்; மண் பக்குவமடையும். பனிக்காலம் முடியும் நிலையில், காரட், பீட்ரூட் விதைகளை சாகுபடி செய்யும் போது, விளைச்சல் அமோகமாக இருக்கும்; விளையும் பயிர், தரம் நிறைந்ததாக இருக்கும் என்பதால், மாவட்டத்தில் காரட், பீட்ரூட் சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்கள் விவசாய நிலங்களை டிராக்டர் உட்பட இயந்திரங்கள் மூலம் உழுது, பக்குவப்படுத்தி வைத்துள்ளனர்.

**தள்ளிப் போகுமா சாகுபடி**

ஊட்டி குருத்துக்குளியைச் சேர்ந்த விவசாயி துரைசாமி கூறுகையில்,“பனி விழும் விவசாய நிலங்களில், புழு, பூச்சிகள் அழிந்து, நிலம் பதப்படும். ஊட்டியில், நவ., இரண்டாம் வாரத்தில் துவங்க வேண்டிய பனி, இனி, தீவிரமடையவில் லை. கடந்த இரு நாளாக தான், பனிப்பொழிவு தென்படுகிறது.

எந்தளவு பனி பெய்கிறதோ, அந்தளவு, பருவ மழை சிறப்பாக இருக்கும் என, நம்பப்படுவதும் உண்டு. எனவே, விவசாயிகள், பனியை எதிர்நோக்கி காத்துள்ளனர். பொங்கலுக்கு பின், காரட், பீட்ரூட் கார்போக சாகுபடிக்கு

விவசாயிகள் தயாராகி வருகின்றனர். தாமதமாக துவங்கிய பனிப் பொழிவு ஒரு வேளை பொங்கலுக்கு பிறகும் நீடித்தால், சாகுபடி தள்ளிப் போகும். இதனால், சற்று குழப்பமடைந்துள்ளோம்," என்றார்.

**தண்ணீருக்கு 'தாளம்' இல்லை**

விவசாயி மூர்த்தி கூறுகையில்,"மாவட்டத்தில், கடந்தாண்டு ஓரளவு மழை பெய்த நிலையில், விவசாய நிலங்களில் உள்ள நீர் நிலைகள் ஓரளவு நிரம்பியுள்ளன. 90 சதவீத விவசாயிகள், தங்கள் நிலங்களில் ஆழ்துளை கிணறுகளை அமைத்துள்ள நிலையில், தண்ணீருக்காக வானம் பார்க்க வேண்டிய அவசியம் வரவில்லை. இருப்பினும், பனிப் பொழிவை எதிர்நோக்கியுள்ளோம்," என்றார்.

**புத்துணர்வு பெறும் பூண்டு**

மாவட்டத்தில், பெரும்பாலான விவசாயிகள் வெள்ளைப் பூண்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். பூண்டு செடியின் மேல் அதிகளவு பனி விழுவது, அதன் விளைச்சலுக்கு சிறந்தது; விளையும் பூண்டின் தரம் சிறப்பாக இருக்கும் என்பதால், பூண்டு விவசாயிகளும், பனியை எதிர்நோக்கி காத்துள்ளனர். இதற்கான, முத்தோரை, பாலாடா உட்பட ஊட்டி புறநகர் பகுதிகளில், நிலத்தை தயார் பணி துரிதமாக நடந்து வருகிறது.

**நுண்ணீர் பாசனத்திற்கு 2,983 ஏக்கர் இலக்கு**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், நுண்ணீர் பாசன முறையில், 2,983 ஏக்கர் விளைநிலங்களில், மானியத்துடன் சாகுபடி செய்ய, விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை அழைப்பு விடுத்துள்ளது. ரூ.7.12 கோடி ஒதுக்கீடு :

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நெற்பயிர் தவிர, மற்ற பயிர் சாகுபடிக்காக, பிரதமரின் வேளாண் நீர்ப்பாசன திட்டத்தின் மூலம், நுண்ணீர் பாசன முறையில் சாகுபடி செய்ய, தோட்டக்கலை துறை அழைப்பு விடுத்துள்ளது.அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 2,983 ஏக்கர் நிலங்களில், நுண்ணீர் பாசன முறையில், சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதற்காக, 7.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.நுண்ணீர் பாசனம் மூலம், காய்கனிகள் மற்றும் இதர பயிர்கள், செம்மையாகவும்; சீராகவும் வளர நுண்ணீர் பாசன முறையை பயன்படுத்த தோட்டக்கலை துறை அறிவுறுத்துகிறது. ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தப்படும் தண்ணீரை, 3 ஏக்கர் நிலத்திற்கு இந்த நுண்ணீர் பாசனத்தில் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கிறது.நுண்ணீர் பாசன முறையில், சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், நிலத்திற்கான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பச் சான்றுடன், அருகில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்தை அணுகலாம்.

மானியம் வழங்க... தோட்டக்கலை துறை துணை இயக்குனர் சுரேஷ்ஸ்ரீராம் கூறியதாவது:இந்த ஆண்டு நுண்ணீர் பாசனம், 2,983 ஏக்கர் விளைநிலங்களுக்கு, பரப்பு, பயிரின் வகைப்பாட்டிற்கு ஏற்றவாறு மானியம் அளிக்கப்பட உள்ளது.விவசாயிகள், சிட்டா, அடங்கல், விருப்ப கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வந்தால், நுண்ணீர் பாசனத்திற்கு தேவையான மானியம் வழங்க நடவடிக்கை எடுப்போம்.இவ்வாறு அவர் கூறினார்.

**கரும்பை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம்**

உத்திரமேரூர் : உத்திரமேரூரை சுற்றி உள்ள கரும்பு விவசாயி கள், தாங்கள் பயிரிட்டுள்ள கரும்பை, எந்த சர்க்கரை ஆலைக்கு அனுப்புவது என்பதை உறுதிப்படுத்த முடியாததால், சாகுபடி காலம் முடிந்தும், கரும்பை அறுவடை செய்ய முடியாமல், தவித்து வருகின்றனர். உத்திரமேரூர் ஒன்றியத்தில், சாத்தணஞ்சேரி, சீட்டஞ்சேரி, பினாயூர், அரும்புலியூர், கரும்பாக்கம், சீதாவரம், மாம்பாக்கம், விச்சூர், மிளகர்மேனி, களியப்பேட்டை, ராஜாம்பேட்டை, திருவானைக்கோவில், ஒரக்காட்டுப்பேட்டை, காவிதண்டலம், தென்பாதி, வடபாதி, மருதம், மருத்துவன்பாடி போன்ற பகுதிகளில், பிரதானமாக கரும்பு பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் மட்டும், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில், 600 ஏக்கர் பரப்பளவில், கரும்பு பயிரிடப்பட்டு உள்ளது. அப்பகுதிகளில், பயிடப்படும் கரும்பை, வாலாஜாபாத் அருகே உள்ள, பழையசீவரம் தனியார் சர்க்கரை ஆலைக்கு அரவைக்கு அனுப்புவது வழக்கம்.

ஆனால், நடப்பாண்டில், அந்த ஆலை இயங்காததால், அரவைக்கு தயாரான கரும்பை அறுவடை செய்ய முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பை அனுப்ப, மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்க வேண்டும் என, வலியுறுத்தினோம். ஆனால், மாவட்ட நிர்வாகம், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பை அனுப்ப, சர்க்கரை ஆலை இயக்குனர் மற்றும் பழையசீவரம் தனியார் ஆலை நிர்வாகத்தினர் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். அங்கு, கரும்பை அனுப்புவதால், கூடுதல் நேரம் மற்றும் போக்குவரத்து செலவு அதிகரிப்பு போன்ற பிரச்னைகள் உள்ளன.

-இல.வேணு கரும்பு விவசாயி, சாத்தணஞ்சேரி எந்த சர்க்கரை ஆலைக்கு கரும்பை அனுப்புவது என்ற சிக்கல் உள்ளது. இதனால், கரும்பு முதிர்ச்சியடைந்தும், அறுவடை செய்யாமல் உள்ளோம். தொடர் மழையால், பாதிக்கப்பட்டு உள்ள கரும்பு விவசாயிகள், காலதாமதத்தால், சொத்தை மற்றும் எடை குறைதல் போன்ற பிரச்னைகளால், மேலும் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பை அனுப்ப, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-எஸ்.வேதாச்சலம், கரும்பு விவசாயி, ராஜாம்பேட்டை

**திருக்கோவிலூர் பகுதியில் சம்பா நெல் நடவு பணி தீவிரம்**

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் பகுதியில் சம்பா நெல் நடவு பணி துவங்கியது. ஆள் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை கடந்த இரண்டு மாதங்களாக இடைவிடாது பெய்ததால், திருக்கோவிலூர் பகுதி விவசாயிகள் நெல் நாற்றங்கால் தயார் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. கடந்த மாதம் 10ம் தேதி அளவில்தான் நெல் நாற்றங்கால் விட்டனர். இதனால் தற்போது உழவுபணி, நடவு என விவசாய வேலைகள் சூடு பிடித்துள்ளது. இயந்திர நடவு ஒருபக்கம் நடந்து கொண்டிருந்தாலும், ஏரிபாசன நிலங்களில், இதனை வெற்றிகரமாக செயல்படுத்த முடியாத நிலை உள்ளது.

இயந்திர நடவுக்கு நாற்றங்கால் தயார் செய்யும்போதே, தட்டுவைத்து நாற்று விட வேண்டும். அதிக சேற்றில் இயந்திரம் சிக்கிக் கொள்ளும் என்பதாலும், ஒரே நேரத்தில் பல நூறு ஏக்கரில் நடவு பணி மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டதாலும், ஆள்வைத்து நடவு செய்ய வேண்டிய கட்டாயம் நிலவுகிறது.

தற்போது விவசாயிகள் டிராக்டர் மூலம் உழவு பணியை நிறைவு செய்துள்ளனர். நடவுக்கு ஆட்கள் கிடைப்பது பெரும் சிரமமாக உள்ளது. நாற்று விட்டு ஒருமாதமாகி விட்டதால், உடனடியாக நடவு செய்ய வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இதனால் வெளியூர்களில் இருந்து ஆட்களை அழைத்துவந்து காண்ட்ரக்ட் முறையில் நடவு செய்கின்றனர். திருக்கோவிலூர் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள ஏரிப்பாசன நிலங்கள் முழுவதும் ஒரே நேரத்தில் நடவு பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதே ஆள்பற்றாக்குறைக்கு காரணம். தாமதமாக நடவு பணி துவங்கினாலும், உரதட்டுப்பாடு இன்றி, ஏரி நிறைய தண்ணீர் இருப்பதால் விவசாயிகள், அச்சமின்றி நடவு பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## மரக்காணம் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்குமா?

மரக்காணம்: மரக்காணம் பகுதியில் நிவாரணம் கிடைக்காததால் விவசாயிகள் மறுபோக சாகுபடி செய்யமுடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

மரக்காணம் பகுதியில் பெய்த கன மழையால், கீழ்புத்துப்பட்டு முதல் மரக்காணம் வரை உள்ள 20 கிராமங்களில் பயிர் செய்யப்பட்ட சம்பா நெல் சாகுபடி, 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அடியோடு மூழ்கி சேதமடைந்தது. மரக்காணம் தாலுக்காவில் பெரும்பாலான கிராமங்களில் குடிநீர் உப்புநீராக மாறிவிட்டதால், ஆண்டிற்கு ஒரு போக சாகுபடி மட்டுமே நடக்கிறது. இதனால் அடுத்த போகம் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் வேதனை அடைகின்றனர். வேளாண் துறையினர் சேதமடைந்த கிராமங்களில் ஆய்வு செய்து வருகின்றனர். நிவாரணம் எப்போது கிடைக்கும் என்ற கேள்வி விவசாயிகளிடையே எழுந்துள்ளது.வெள்ளம் பாதித்து இரண்டு மாதங்கள் ஆகியும், வீடுகளில் மழைநீர் சூழ்ந்த மக்களுக்கு முழுமையாக நிவாரணம்

கிடைக்காமல் போராடி வருகின்றனர். விவசாயிகளுக்கு அரசு அறிவித்தபடி நிவாரணம் கிடைக்குமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் மறு போகம் நெல் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு செயல் திட்ட பயிற்சி**

நாமகிரிப்பேட்டை: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், விவசாயிகளுக்கு அடுத்த ஏழு ஆண்டுகளுக்கான செயல் திட்டம் தயாரிக்கும் நிகழ்ச்சி, ஒன்றியங்கள் தோறும் நடந்து வருகிறது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வட்டார அளவிலான செயல் திட்டம் தயாரிப்பது குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் பொன்னுசாமி பங்கேற்றார். இதில், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். மெட்டாலாவில் உழவர் சந்தை, 75 சதவீத மானியத்தில் சிறுதானிய அறுவடை இயந்திரம், மினி டிராக்டர், ஒவ்வொரு பயிருக்கும் தனிகாப்பீடு, அனைத்து விவசாயிகளுக்கும் தேனீ வளர்ப்பு பெட்டி வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தனர்.

**மேட்டூர் கால்வாய் நீர் திறப்பு: ஜன.18 வரை 15 நாள் நீடிப்பு**

மேட்டூர்: மேட்டூர் கால்வாயில், ஜன.18 வரை கூடுதலாக, 15 நாட்கள் நீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும், ஆக.1 முதல், டிச.15 வரை, 137 நாட்கள் பாசனத்துக்கு நீர் திறக்கப்படும். இதன் மூலம், சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில், 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். நடப்பாண்டு தாமதமாக, ஆக. 20ல் நீர் திறக்கப்பட்டதால், நேற்று பாசன நீரை நிறுத்த வேண்டும். விவசாயிகள் கோரிக்கை ஏற்று, இன்று (ஜன.4) முதல், வரும், 18 ம் தேதி வரை கூடுதலாக, 15 நாட்கள் பாசனத்துக்கு நீர்திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

## கரும்பு விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கரும்பு விலை உயர்ந்துள்ளதால், கிருஷ்ணகிரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பொங்கல் பண்டிகையை குறி வைத்து கிருஷ்ணகிரி நகரைச் சுற்றியுள்ள கே.பூசாரிபட்டி, கரடிகுறி, மேகலசின்னம்பள்ளி, கம்மம்பள்ளி, மகாராஜகடை உட்பட பல கிராமங்களில், ஏராளமான விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். பண்டிகை நெருங்குவதால் தற்போது கரும்பு அறுவடைக்கு தயாராகி வருகிறது. கடந்த ஆண்டு, ஒரு ஜோடி கரும்பு, அதிகபட்சமாக, 70 ரூபாய் வரை விற்பனையானது. நடப்பாண்டு பொங்கலுக்கு இன்னும், 10 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், தற்போது, ஒரு ஜோடி கரும்பு, 90 ரூபாய் வரை விற்பனையாகிறது. பொங்கல் பண்டிகை சமயத்தில் இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து கே. பூசாரிப்பட்டியைச் சேர்ந்த கரும்பு விவசாயி ராமன் கூறியது: இந்தாண்டு கரும்புக்கு நல்ல விலை கிடைக்கிறது. பொங்கல் பண்டிகை சமயத்தில், ஒரு ஜோடி கரும்பு, 100 முதல் 120 ரூபாய் வரை விற்க வாய்ப்புள்ளது. அதனால் கரும்பு விவசாயிகளுக்கு இந்தாண்டு நல்ல விலை கிடைக்கும் என்பதால் மகிழ்ச்சியில் உள்ளனர். தோட்டத்தில் விளைந்துள்ள கரும்பை, வியாபாரிகள் மொத்தமாக விலை பேசி வாங்க வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் நடவு இயந்திரங்கள் இல்லை: அதிக கூலி கொடுக்க வேண்டிய கட்டாயம்

கிருஷ்ணகிரி: விவசாயிகளுக்கு நெல் நடவு இயந்திரங்களை, வேளாண் பொறியியல் துறையினர் சரிவர வழங்காததால், கே.ஆர்.பி., அணை பகுதி விவசாயிகள், கூலி ஆட்களைக் கொண்டு நெல்நடவை செய்கின்றனர்.

கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில், 10 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு நெல் நாற்று நடவு செய்ய, வேளாண்மை பொறியியல் துறை சார்பில், நெல் நடவு இயந்திரம் வாடகைக்கு விடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கே.ஆர்.பி., அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடும் போது, விவசாயிகள் ஒரே நாளில்

நெல் நாற்றுகளை விடுவதால், அனைத்து விவசாயிகளுக்கும் நெல் நடவு இயந்திரங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கூலி ஆட்களைக் கொண்டு நெல் நடவையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஏற்கெனவே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், 150 ரூபாய் கூலி வாங்கி வரும் பெண்கள், தற்போது நெல் நடவுக்கு, 200 ரூபாய் கூலியாக கேட்கின்றனர். நெல் நாற்றுகளை அதிக நாள் பிடுங்காமல் விட்டால், நாற்றுகள் முற்றி மகசூல் பாதிக்கும் என்பதால், கேட்ட கூலியை கொடுத்து, நடவு பணியை செய்கின்றனர். இனி வரும், பருவத்தில் அனைத்து விவசாயிகளுக்கும், நெல் நடவு இயந்திரத்தை வழங்க, வேளாண்மை பொறியியல் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பசுந்தேயிலைக்கு ரூ.13 விலை நிர்ணயம்

ஊட்டி: பசுந்தேயிலைக்கான, ஜனவரி மாத சராசரி விலையாக, 13 ரூபாயை தேயிலை வாரியம் நிர்ணயம் செய்துள்ளது. தென் மண்டல தேயிலை வாரிய தேயிலை மேம்பாட்டு பிரிவு இணை இயக்குனர் ஹரிப்பிரகாஷ் அறிக்கை: தேயிலை சந்தை கட்டுப்படுத்தும் சட்டம், 2003, பிரிவு, 30-ஏ, படி, நீலகிரி மாவட்டத்தில் விளையும், பசுந்தேயிலைக்கான ஜனவரி மாதத்துக்கான சராசரி விலை யாக, கிலோவுக்கு, 13 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள், தங்களிடம் பசுந்தேயிலை வழங்கும் சிறு விவசாயிகளுக்கு, அந்த தொகையை விட குறைவாக வழங்கக் கூடாது. பிப்., மாதத்துக்கான சராசரி விலை, இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும். இவ்வாறு, ஹரிபிரகாஷ் கூறினார்.

### நெருங்கும் பொங்கல் பண்டிகை: விற்பனைக்கு குவியும் கரும்பு

கரூர்: பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், கரூரில் விற்பனைக்காக கரும்பு வரத்து அதிகரித்துள்ளது. தமிழர்களின் முக்கிய பண்டிகையான பொங்கல் விழா வரும், 13ம் தேதி முதல் கொண்டாடப்படுகிறது. இதற்காக,

மஞ்சள், கரும்பு அறுவடையை விவசாயிகள் துவக்கியுள்ளனர். கடந்த, இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், விவசாய சாகுபடி பணிகளில் சிறிதளவு பாதிப்பு ஏற்பட்டது. ஆனால், நடப்பாண்டு பருவமழை எதிர்பார்த்ததை விட அதிகளவில் பெய்துள்ளது. இதனால், மானாவரி நிலங்களில் கூட எண்ணெய் வித்துக்கள் பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். எனவே, நடப்பாண்டு பொங்கல் பண்டிகையை விவசாயிகள் மட்டுமல்ல, பொதுமக்களும் சிறப்பாக கொண்டாட திட்டமிட்டு வருகின்றனர். பொங்கல் பண்டிகைக்கு இன்னும், 10 நாட்களே உள்ள நிலையில் நேற்று கரூரில் கரும்பு வியாபாரம் சூடுபிடித்தது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன், திருச்சி மாவட்டம் மணப்பாறை பகுதிகளில், அறுவடை செய்யப்பட்ட கரும்புகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். ஒரு ஜோடி கரும்பு, 50 ரூபாய் முதல், 70 ரூபாய் வரை நேற்று கரூரில் விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து கரும்பு வியாபாரிகள் கூறியதாவது: கரும்பு அறுவடை செய்ய திட்டமிடப்பட்ட நாட்களில், மழை பெய்தது. இதனால், கரும்பு நன்கு விளைந்துள்ளது. எதிர்பார்த்ததை விட கரும்பில் இனிப்பும் அதிகமாக உள்ளது. நடப்பாண்டு அதிகளவில் கரும்பு விற்பனைக்கு வரும். பொங்கல் திரு விழாவின் போது, உயர்ந்த ரக கரும்பின் விலை அதிகரிக்க வாய்ப்புண்டு. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கேரட், பீட்ரூட் விலை உயர்வு**

திண்டுக்கல்:திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் கேரட், பீட்ரூட் கிலோ ரூ.60 க்கு விற்பனையானது. மழையால் கேரட், பீட்ரூட் விளைச்சலின்றி போனது. செடியிலேயே அழுகும் நிலை ஏற்பட்டது. இதனால் வரத்து குறைந்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் கேரட் 730 எக்டேரிலும், பீட்ரூட் 148 எக்டேரிலும் சாகுபடியாகிறது. திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு தினமும் கேரட் 400 கிலோவும், பீட்ரூட் 200 கிலோ வரை விற்பனைக்கு வரும். சாதாரண நாட்களில்

கேரட் கிலோ ரூ.25 முதல் ரூ.35 க்கும், பீட்ரூட் கிலோ ரூ.20 முதல் 30 வரை விற்பனையாகும்.

மழையால் வரத்து குறைந்த கேரட் நேற்று முன்தினம் கிலோ ரூ.45க்கு விற்றது. நேற்று ரூ.60 க்கு விற்றது. அதேபோல வரலாறு காணாத அளவில் பீட்ரூட் விலை அதிகரித்துள்ளது. வழக்கமாக ரூ.30 வரை மட்டுமே விற்பனையாகும் பீட்ரூட் இரண்டு நாட்களாக கிலோ ரூ.60க்கு விற்றது. இதனால் பொதுமக்கள் கேரட், பீட்ரூட் வாங்குவதை தவிர்த்து விலை மலிவான மற்ற காய்கறிகளை வாங்கி சென்றனர். வியாபாரி ஒருவர் கூறுகையில்,"மழையால் வரத்து குறைந்தது. உள்ளூர் வரத்தும் பெரிதாக இல்லாததால் விலை அதிகரித்துள்ளது. பொங்கல் நேரங்களில் இன்னும் விலை அதிகமாகலாம்' என்றார்.

**நிலக்கடலை விளைச்சல் குறைவு**

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி பகுதியில் நிலக்கடலை விளைச்சல் குறைந்ததால் விவசாயிகள் பாதிப்படைந்தனர். மேற்கு தொடர்ச்சிமலை வேலப்பர் கோயில் மலை அடிவாரப்பகுதி, தெப்பம்பட்டி, அழகாபுரி, ராயவேலூர், பாலக்கோம்பை, ராசக்காள்பட்டி உட்பட்ட பகுதியில் <உள்ள விவசாயிகள் மானாவாரி, இறவை பாசன நிலங்களில் நிலக்கடலை சாகுபடி செய்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெய்யும் தென்மேற்குதென்மேற்கு பருவமழையை நம்பி நிலக்கடலை சாகுபடியை துவக்குவர். இந்த ஆண்டும் வழக்கம்போல நிலக்கடலையை 6 மாத பயிராக மானாவாரியாகவும், 4 மாத பயிராக இறவை பாசன நிலங்களிலும் விதைப்பு செய்தனர். பயிர் வளர்ச்சிக்கான காலங்களில் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை.

தொடர்ச்சியாக பெய்த வடகிழக்கு பருவமழையும், நிலக்கடலை பயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. இதனால் இப்பகுதியில் 300 ஏக்கருக்கும் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தெப்பம்பட்டி விவசாயி விஜயன் கூறியதாவது: நிலக்கடலை சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 75 கிலோ கொண்ட 50 மூடைகள் வரையில் மகசூல் கிடைக்கும். இந்தாண்டு நான்கில் ஒரு பங்கு அளவுக்கு கூட விளைச்சல் இல்லை. இறவை பாசன நிலங்களிலும் விளைச்சல் இல்லை. விதைக்கடலையை மூடை ஒன்றுக்கு 3700 ரூபாய்க்கு வாங்கி விவசாயிகள் நடவு செய்தனர். தற்போது விலை மூடை 1200 முதல் 1500 வரை மட்டுமே விலை உள்ளதால், பலருக்கும் இந்தாண்டு நஷ்டமே ஏற்பட்டுள்ளது, என்றார்.

**விவசாயிகளுக்கு கை கொடுக்கும் சோளம்**

தேனி: தேனி அருகே முத்தலம்பட்டி, கோவில்பட்டி, மாலப்பட்டி, கதிரகவுண்டன்பட்டி உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. கண்மாய் பாசனம் குறைவு. இதனால் இப்பகுதி விவசாயிகள் மானாவாரியை நம்பி உள்ளனர். குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய சோளம், கேழ்வரவு போன்ற பயிர்களை விளைவித்துள்ளனர். சமீபத்தில் பெய்த மழையால் சோளம் நன்றாக வளர்ச்சியடைந்து, மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. மாலப்பட்டி விவசாயி தங்கப்பாண்டி கூறுகையில், "" ஒரு ஏக்கரில் சோளம் பயிரிட்டுள்ளேன். மகசூல் பருவத்தில் உள்ளது. ஏக்கருக்கு குறைந்தது 10 முதல் 15 மூடைகள் மகசூல் கிடைக்கும். களை எடுப்பு, மருந்து தெளிப்புக்கு செலவில்லை. அறுவடைக்கு மட்டுமே கூலி உண்டு. தைப் பொங்கல் முடிந்து ஒரு சில நாட்களில் அறுவடை செய்யப்படும். ஒரு மூடைக்கு வெளி மார்க்கெட்டில் ரூ. 1,100 வரை விலை கிடைக்கிறது. ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்", என்றார்.

**மரம், செடிகளை வளர்ப்போம்; பூமியை குளிர்விப்போம்**

சுத்தமான காற்று, சுகாதாரமான குடிநீர் ஆரோக்கியமான வாழ்விற்கான அடிப்படை காரணிகள். பெட்ரோல், டீசல் வாகனங்கள், ஆலைகளின் புகையால் நாள் தோறும் காற்று மாசுபட, அவற்றை மரங்கள், செடிகள்

சுத்திகரித்து மனிதர்களுக்கு தேவையான ஆக்சிஜனை அளிக்கின்றன. முன்னோர்கள் வீடுகளில் இயற்கை முறையில் தோட்டம் அமைத்து அன்றாட காய்கறிகளை தோட்டத்தில் இருந்தே பெற்று வந்தனர். இதன் மூலம் நாள்தோறும் வீட்டிற்கு தேவையான காய்கறிகளை பெற்ற தோடு உடலுக்கு தேவையான சுத்தமான காற்றையும் சுவாசித்து வந்தனர். நாகரிக வளர்ச்சி, நகர் மயமாதல், மக்கள் தொகை காரணமாக தற்போது பல அடுக்கு மாடி வீடுகள் உருவாகி, காற்றுவந்து செல்வதற்கும் வசதியில்லாத வகையில் இடநெருக்கடி அதிகரித்து வருகிறது. இதனால் மாசடைந்த காற்று, சுகாதாரமில்லாத குடிநீரை குடித்து பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறோம் சாத்தூர் அருகே என்.சுப்பையாபுரத்தில் முன்னோர் வாழ்ந்த முறையில் வீட்டில் தோட்டம் அமைத்து அதை நாள்தோறும் பராமரித்து வரும் ஜே.முத்துக்குமார் கூறுகையில், ""வீட்டில் தோட்டம் அமைத்து பராமரிப்பது மனதிற்கு நிம்மதி , மகிழ்ச்சியை தருகிறது. சிட்டுக்குருவிகள் மற்றும் பல வண்ண பறவைகள் கீச்...கீச் என மரங்களில் அமர்ந்து எழுப்பும் ஒலி மனதில் உள்ள கவலைகளை போக்குகிறது. மாதுளை, கொய்யா, தென்னை, கறிவேப்பிலை மரங்களை வீட்டு தோட்டத்தில் பராமரிப்பதால் ,வெயில்காலத்தில் வெப்பம் தெரியாது குளு, குளு என இருக்கும். செயற்கையான குளிர்ச்சிக்கு மத்தியில் "ஏசி' அவசியம் இல்லை. காலியிடத்தில் மரங்கள், காய், பழச்செடிகளை பயிரிட்டால் அவை வளர வளர மண்ணும் குளிரும்... நமது வயிறும் குளிரும். எங்கள் கிராமத்தினர் பலரும் மரம், செடிகளை வளர்ப்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்கள் என்பதால், ஊராட்சித்தலைவர் மகாலட்சுமி தலைமையில் மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் 370 மரக்கன்றுகளை கிராமப்பகுதியில் நட்டு பராமரித்து வருகிறோம். இதை பாராட்டி மாநில அரசானது எங்கள் ஊராட்சிக்கு "பசுமை கிராமம்' விருது வழங்கி உள்ளது. சுத்தமான காற்று, போதுமான மழை, நோயில்லாமல் வாழ வீடுகள் தோறும் தோட்டம் அமைக்கலாம். முடியாதவர்கள் தங்கள் வீடுகள் முன்பு உள்ள காலியிடத்தில் ஒரு மரக்கன்றையாவது நட்டு வளர்ப்பதன் மூலம் நாடு, வீடும் மாசில்லாத நிலையை உருவாக்கும் ,"என்றார். பாலிதீன் விழிப்புணர்வு

இல்லையே சங்கரேஸ்வரன் (சாத்தூர்): பாலிதீன் பைகளுக்கு உள்ளாட்சி அமைப்புகள் தடைவிதித்துள்ள போதும். பலரும் பாலிதீன் பைகளையே பயன்படுத்துகின்றனர். பாலிதீன் பைகளில் உணவு பொருட்களை வாங்கி சென்று பயன்படுத்தி விட்டு கீழே வீசி எறிவதால் இவற்றை உண்ணும் கால்நடைகள் பலியாகின்றன. மறு சுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பாலிதீன் பைகளை பொதுமக்கள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

வியாபாரிகளுக்கு தரமான மறு சுழற்சிக்கு பயன்படுத்தக்கூடிய அதிக மைக்ரான் எடையிலான பாலிதீன் பைகளையே வழங்க வேண்டும். பாலிதீன்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது குறித்த விழிப்புணர்வும் மக்களிடம் ஏற்பட வேண்டும். முள் செடிகளை அகற்றுவோம் நீர்நிலைகளை பாதுகாப்போம்

ஞானக்குமார் (சாத்தூர்) : வைப்பாறு, உப்போடை நதி, வேண்டாங்குளம் கண்மாய் நீர் பிடிப்பு பகுதிகளில் அதிகளவில் சீமைக் கருவேலமரங்கள் முளைத்துள்ளன. இதனால் நிலத்தடிநீர் மட்டம் பாதிக்கப்படுவதுடன், தேங்கி நிற்கும் தண்ணீரின் தன்மையும் பாதிக்கிறது. அதிகளவு நீரை ஊறிஞ்சி வறட்சியை கொண்டு வரும் சீமைக்கருவேல மரங்களை அகற்ற அரசுடன் பொதுமக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். வீட்டின் அருகில் செடியாக இவை முளைக்கும் போதே பொதுமக்கள் அகற்ற வேண்டும். இதன் மூலம் இத்தகைய செடிகள் வளர்ச்சியடைவது தடைபடும். நீர் நிலைகளை திறந்தவெளி கழிப்பிடமாக பயன்படுத்துவதை அனைவரும் தவிர்க்க வேண்டும். ஆறு, குளம், கண்மாய், ஊரணிக்கு தண்ணீர் வரும் வரத்து கால்வாய்களில் உள்ள முள்செடிகளை அகற்றவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மாசில்லா நீர் நிலைகள் உருவாகும்.

**மழையால் பயிர்கள் பாதிப்பு**

கீழக்கரை: திருப்புல்லாணி ஒன்றியம் உத்தரகோசமங்கை, களரி, சுமைதாங்கி, வேளானூர், மேலமடை, பள்ளமோர்க்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சில தினங்களுக்கு முன் கனமழை பெய்தது. இதில் அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட மிளகாய், பருத்தி, நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. ஏற்கனவே

பருவம் தவறிய மழையால் மிளகாய் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருந்தது. மேலும் நேற்று பெய்த கன மழையால் மிளகாய்க்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

மோர்க்குளம் விவசாயி தங்கராஜ் கூறுகையில், ""மிளகாய், பருத்தி, எள், மல்லி உள்ளிட்ட பயிர்களுடன் சிறுதானியங்களை விளைவித்துள்ளோம். நேற்று பெய்த மழையால் பயிர்களை நீர் சூழ்ந்துள்ளது. இதனால் நெற்பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பருத்தியில் அதிக மகசூல்: இரு விவசாயிகளுக்கு விருது**

கோவை மாவட்டத்தில் தரமான பருத்தி உற்பத்தி செய்து, அதிக மகசூல் எடுத்த 2 விவசாயிகளுக்கு இந்திய பருத்திக்கழகம் சார்பில் விருது வழங்கப்பட்டது.

இந்தியப் பருத்திக் கழகம் சார்பில் தேசிய அளவில் அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்தல், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் உள்ளிட்டவைகளுக்காக ஆண்டுதோறும் இந்தியா முழுவதும் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் 2014-2015-ஆம் ஆண்டிற்கான விருதுக்கு கோவை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் அன்னூர் அருகே உள்ள அல்லப்பாளையம் பகுதியைச் சேர்ந்த காளியப்பன், கிணத்துக்கடவு அருகே உள்ள வடபுதூர் பகுதியைச் சேர்ந்த தனராஜ் என்பவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஹரியாணா மாநிலம் குர்கானில் நடைபெற்ற இந்தியப் பருத்திக் கழகத்தின் ஆண்டு கூட்டத்தில் விருது, ரொக்கப் பரிசு தலா ரூ.11 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டது.

விருது பெற்ற அன்னூர் விவசாயி காளியப்பன் கூறுகையில்,"எனது தோட்டத்தில் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் செயல் விளக்கத் திடல் அமைக்கபட்டு, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பருத்தி உற்பத்தியில் அதிக மகசூலை பெற்றுள்ளதற்காக இந்த விருது வழங்கப்பட்டது' என்றார். விவசாயி தனராஜ் கூறுகையில்,"மத்திய பருத்தி ஆராய்ச்சி கழகம் சார்பில் தரமான பருத்தி உற்பத்தி செய்ய 100 விவசாயிகளை தேர்வு செய்தது.

தேவையான ஆலோசனைகளையும், பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு உதவிகளையும் செய்தனர். இதனால் சராசரியாக 1 ஏக்கருக்கு 7-8 குவிண்டால் பருத்தி உற்பத்தி கிடைப்பதை தற்போது 1 ஏக்கருக்கு 14 குவிண்டால் தரமான பருத்தி உற்பத்தி செய்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டது' என்றார்.

இவ்விருது தமிழ்நாட்டில், கோவை மாவட்டத்தில் மட்டும் இரண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு வேளாண் துறை அதிகாரிகள், விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**ஈரோடு சந்தையில் ஒரு கிலோ தக்காளி ரூ.70**

ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் ஒரு கிலோ தக்காளிப் பழம் ரூ. 70-க்கு சனிக்கிழமை விற்பனையானது. ஈரோடு நேதாஜி காய்கறி சந்தைக்கு சேலம், நாமக்கல், தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் விளையும் காய்கறிகள் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகின்றன. ஈரோடு சந்தையில் இருந்து கோபி, கொடுமுடி, பெருந்துறை, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சந்தைகளுக்கு காய்கறிகள் கொண்டு செல்லப்படுகின்றன. தக்காளியைப் பொருத்தவரை தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், ஆந்திர மாநிலத்தில் இருந்து அதிக அளவில் இச்சந்தைக்கு வருவது வழக்கம். கடந்த ஒரு மாதமாக பெய்த மழையால் தருமபுரி, கிருஷ்ணகிரி, தாளவாடி பகுதிகளில் தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், கடந்த ஒரு மாதமாக தருமபுரி, கிருஷ்ணகிரி, தாளவாடியில் இருந்து ஈரோடு சந்தைக்கு தக்காளி வரவில்லை. ஆந்திர மாநிலத்தில் இருந்து மட்டும்தான் தக்காளி வருகிறது. தக்காளி வரத்து குறைந்துவிட்டதால் 15 கிலோ கொண்ட தக்காளிப் பெட்டி ரூ. 650-க்கு சனிக்கிழமை விற்பனை செய்யப்பட்டது. சில்லரை விலைக்கு வாங்கும்போது ஒரு கிலோ தக்காளி ரூ. 70-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து ஈரோடு நேதாஜி தினசரி காய்கறி சந்தை தலைவர் பி.பி.கே.பழனிசாமி கூறியதாவது:

ஈரோடு சந்தைக்கு சில நாள்களுக்கு முன்பு வரை 5 ஆயிரம் கிலோ தக்காளி விற்பனைக்கு வந்தது. தற்போது 10,000 கிலோ தக்காளி மட்டுமே வருகிறது. இன்னும் சில வாரங்களில் உள்ளூர் தக்காளி வரத்து அதிகரித்தால் விலை குறையும் வாய்ப்பு உள்ளது என்றார்.

**ரூ. 75 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 75 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள், 2,796 மூட்டைகளில் 1,35,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ
ரூ. 58.25-க்கும், அதிகபட்சமாக ரூ. 61.15-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 31-க்கும், அதிகபட்சமாக ரூ. 57.05-க்கும் ஏலம் போனது. மொத்தம், ரூ. 75 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**ரூ.15 லட்சத்துக்கு தேங்காய் ஏலம்**

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்ற தேங்காய், கொப்பரை ஏலத்தில் ரூ. 15.57 லட்சத்துக்கு விற்பனையானது. வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு அவல்பூந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 598 மூட்டைகளில் 29 ஆயிரத்து 268 கிலோ எடையுள்ள கொப்பரையை

விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 63.45-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 56.80-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 56.35-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 45-க்கும் என மொத்தம் ரூ. 14 லட்சத்து 88 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், 4.4 டன் எடையுள்ள 11 ஆயிரத்து 375 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 16 ஆயிரத்து 700-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 13 ஆயிரத்து 635-க்கும் என மொத்தம் 69 ஆயிரத்துக்கு ஏலம் போனது. மொத்தம் ரூ. 15 லட்சத்து 57 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது. தேங்காய் ஒன்று ரூ. 3.70 முதல் ரூ. 8.65 வரை விற்பனையானது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏல விற்பனை 8-இல் தொடக்கம்**

குடியாத்தம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வருகிற 8-ஆம் தேதி முதல் பருத்தி ஏல விற்பனை தொடங்கும் என அதன் கண்காணிப்பாளர் பா. பாஸ்கரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை:

குடியாத்தம் பகுதி விவசாயிகள் பயனடையும் வகையில் காட்பாடி சாலையில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வருகிற 8-ஆம் தேதி முதல் பிரதி வாரம் வெள்ளிக்கிழமைதோறும் பிற்பகல் 2 மணியளவில் பருத்தி ஏல விற்பனை நடைபெறும். இதில் விவசாயிகள் தங்கள் பருத்தியை எவ்வித கட்டணமும் இன்றி விற்பனை செய்து கொள்ளலாம். மேலும் வாரந்தோறும், திங்கள்கிழமை முதல் வியாழக்கிழமை வரை காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை விவசாயிகள் தங்களின் பருத்தியை இலவசமாக எடையிட்டுக் கொள்ளலாம்.

**ரூ. 64 லட்சத்தில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையம் திறப்பு**

குளித்தலை வட்டம், இனுங்கூர் ஊராட்சியில் ரூ.64 லட்சம் மதிப்பீட்டில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதையொட்டி, அம்மா சீட்ஸ் எனும் விதைப் பாக்கெட்டுக்களை ஆட்சியர் ச.

ஜெயந்தி விவசாயிகளுக்கு வழங்கினார். கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் ஊராட்சியில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையத்தை முதல்வர் ஜெயலலிதா காணொலிக் காட்சி திறந்து வைத்தார். இதையொட்டி விதை சுத்திகரிப்பு நிலையத்தில் விவசாயிகளுக்கு இனிப்பு வழங்கிப் பேசியது: கரூர் மாவட்டத்தின் மொத்த நெல் சாகுபடி பரப்பு சுமார் 17,500 ஹெக்டேர். மொத்த விதைத் தேவை 875 மெட்ரிக் டன். தமிழக அரசு ரூ.156 கோடி மதிப்பில் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகாம் என்ற அமைப்பின் மூலம் தரமான விதை உற்பத்தி,கொள்முதல்,சுத்திகரிப்பு,விதை ஆய்வு மற்றும் விதை சான்று பெற்று விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. தரமான நெல்,சிறுதானிய விதைக்கு விதை சுத்திகரிப்பு மிகவும் முக்கியம். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 21 நவீன விதைச் சுத்திகரிப்பு நிலையங்களும்,விதை கிராமத் திட்டத்தின் கீழ் 7 மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2011-12ல் கரூர் மாவட்டம்,இனுங்கூர் அரசு விதைப்பண்ணையில் விதை கிராம திட்டத்தின் கீழ் ரூ.37.50 லட்சம் மதிப்பில் விதைச் சுத்திகரிப்பு நிலையக் கட்டடமும்,ரூ.26.50 லட்சம் மதிப்பில் நவீன விதை சுத்திகரிப்பு இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளன. இதுதவிர, விதை தரம் பிரிக்கும் இயந்திரமும்,தானியங்கி எடை இயந்திரம்,ஈர மானி ஆகியவையும் உள்ளன. மேலும்,1,000 மெட்ரிக் டன் விதைகள் இருப்பு வைக்கும் அளவிலான நவீன விதைச் சுத்திகரிப்பு நிலையத்தினை முதல்வர் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார். இதன் மூலம்,விவசாயிகளின் உற்பத்தி இரு மடங்கும்,வருமானம் மும்மடங்கும் அதிகரிக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் அம்மா சீட்ஸ் என்ற பெயரில் விதைப் பாக்கெட்டுக்களை ஆட்சியர் விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் எம்எல்ஏ பாப்பாசுந்தரம், மாவட்ட ஊராட்சித் தலைவர் கீதா மணிவண்ணன், மாவட்ட செயலாளர் விஜயபாஸ்கர்,வேளாண் துறை துணை இயக்குநர் சிவானந்தம்,விதை சுத்திகரிப்பு நிலைய உதவி இயக்குநர் கைலாசபதி, குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், நகர கூட்டுறவு வங்கி தலைவர் ரவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**60 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் கருவி**

விராலிமலை, அன்னவாசல் ஒன்றியத்தில் வேளாண் துறை சார்பில் 60 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் கருவிகளும் உள்பட 318 விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

இலுப்பூர் வேளாண் விற்பனைக் கூட வளாகத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் 318 விவசாயிகளுக்கு ரூ. 1.19 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர் வழங்கிப் பேசியது: தமிழக அரசு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண் இடுப்பொருள்கள் மற்றும் வேளாண் கருவிகளை மானிய விலையில் வழங்கி வருகிறது. அதனடிப்படையில் அன்னவாசல், விராலிமலை வட்டாரத்துக்குட்பட்ட 60 விவசாயிகளுக்கு ரூ. 97 லட்சம் மதிப்பில் மானிய விலையில் பவர் டில்லர் கருவியும், 200 விவசாயிகளுக்கு ரூ. 6 லட்சம் மதிப்பிலான மானிய விலையில் இயந்திர நெல் நடவு தொழில்நுட்பக் கருவியும், தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ் முதற்கட்டமாக 58 விவசாயிகளுக்கு ரூ. 15.95 லட்சம் மானிய மதிப்பில் கறவை மாடுகள் மற்றும் பயிர் சாகுபடிக்கான இடுப்பொருட்களும் என மொத்தம் 318 விவசாயிகளுக்கு ரூ. 1.19 கோடி மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தரமான விதைகள் உள்ளூர் சந்தை விலையை விட குறைவான விலையில் மாநில விதை மேம்பாட்டு முகமையில் அம்மா சேவை மையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் ஆட்சியர் சு. கணேஷ், வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், துணை இயக்குநர் சதானந்தம், கந்தசாமி, உதவி இயக்குநர் சிங்காரம், ஒன்றியக் குழுத் தலைவர்கள் மு. சுப்பையா (விராலிமலை), இளவரசிவசந்தன் (அன்னவாசல்), ஆத்மா குழுத் தலைவர் எஸ். பழனியாண்டி, பி. சாம்பசிவம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பொய்கை அணை மூலம் 947.85 ஏக்கர் பாசன வசதி பெறும்: ஆட்சியர் தகவல்**

பொய்கை அணை மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 947.85 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்றார் மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண்.

ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் அமைந்துள்ள பொய்கை நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்க்காக தண்ணீரை சனிக்கிழமை திறந்து வைத்து அவர் மேலும் பேசியது: இந்த அணையிலிருந்து ஜன.2 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கால்வாய் மதகின் மூலம் பயன் பெறும் 242 ஏக்கர் நேரடி பாசன நிலங்கள் மற்றும் அதன் கீழ் உள்ள 8 குளங்களின் மூலம் பாசனம் பெறும் 208.23 ஏக்கர் நிலங்கள் ஆகியவற்றிற்கு 10 நாள்களுக்கு வினாடிக்கு 17 கனஅடி வீதமும், ஆற்று மதகின் மூலம் பயன் பெறும் 8 குளங்களின் கீழ் பாசனம் பெறும் 497.62 ஏக்கர் நிலங்களுக்கு 13 நாள்களுக்கு வினாடிக்கு 25 கனஅடி வீதமும் என மொத்தம் 947.85 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் வகையில், நீர்வரத்து மற்றும் நீர் இருப்பினை பொறுத்து தண்ணீர் திறக்கப்படும் என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் என். தளவாய்சுந்தரம், கே.டி பச்சைமால் எம்.எல்.ஏ, ஏ. நாஞ்சில்முருகேசன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பால்வளத் தலைவர் எஸ்.ஏ. அசோகன், செயற்பொறியாளர் (நீர் ஆதார அமைப்பு) சுப்பிரமணி, இணை இயக்குநர் (வேளாண்) இளங்கோ, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் பகவதிபெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்) நிஜாமுதீன், உதவி செயற்பொறியாளர்கள் ஜெரால்ட்இனாக், மோகன்தாஸ், தோவாளை வட்டாட்சியர் மூர்த்தி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தாணுபிள்ளை, முன்னாள் எம்.எல்.ஏ. ராஜன், ஆரல்வாய்மொழி பேருராட்சி தலைவர் பத்மாவதிநாகபாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**நெல்லை மாவட்டத்தில் அம்மா விதைகள் திட்டம் தொடக்கம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்மா விதைகள் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் அம்மா விதைகள் திட்டம், முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் சான்று பெற்ற உளுந்து வி.பி.என். 5 ரக விதைகள் தலா 8 கிலோ வீதம் விளாகம் கிராமத்தைச் சேர்ந்த மாயாண்டி, அல்லல்காத்தான், ஆறுமுகம் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) இல.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) து.வெங்கடகிருஷ்ணன், பாளையங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மகாலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

**நெற்பயிரில் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

வலங்கைமான் பகுதியில் மழைக்குப் பின் நெற்பயிரில் ஏற்படும் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் விளக்கம் அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

வலங்கைமான் வட்டாரத்தில் வடகிழக்குப் பருவமழையால் சம்பா, தாளடி நெற்பயிரில் சூழ்ந்த மழைநீர், வடிந்த நிலையில் தற்போது பூச்சி, நோய்த் தாக்குதல் சில இடங்களில் தென்படுகிறது. தற்போதைய காலநிலையில் நெற்பயிரில் தோன்றும் குருத்துபூச்சி, இலைசுருட்டுபுழுவைக் கட்டுபடுத்த ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு என்ற மருந்தை 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இளம்பயிரில் காணப்படும் ஆணைகொம்பன் பூச்சித் தாக்குதலைக் கட்டுபடுத்த ஏக்கருக்கு

குளோர்பைரிபாஸ் 500 மி.லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நெற்பயிரில் பாக்டீரியல் இலைகருகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த 20 சதவீதம் பசும்சாண கரைசலைத் தெளிக்க வேண்டும். 40 கிலோ பசும் சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து அதனுடன் 1 கிலோ சூடோமோனாசை இட்டு கலக்க வேண்டும். அடுத்த நாள் தெளிந்த சானகரைசலை வடிகட்டி 100 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளிக்க வேண்டும் அல்லது ஒரு கிலோ சூடோமோனாசை ஒரு லிட்டர் புளித்த தயிருடன் 200 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

**தை மாத அறுவடைக்குத் தயாராகும் சம்பா நெற்பயிர்கள்**

காரைக்கால் மாவட்டத்தில் மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டது ஒருபுறமிருந்தாலும், மழைக்கு முன்பே நடவுப் பணி முடிந்த இடங்கள், ஆழ்குழாய் பாசனத்தில் விளைந்த பயிர்கள், மழை பாதிப்பையும் மீறி விவசாயிகளால் காப்பாற்றப்பட்ட பயிர்கள் என பரவலாக உள்ளதால், தை மாதத்தில் அறுவடை செய்ய சம்பா நெற்பயிர்கள் தயாராக உள்ளன.

காரைக்கால் மாவட்டத்தில் குறுவை, சம்பா பயிர்கள் சுமார் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆழ்குழாய் பாசனத்தின் மூலம் விதைத்தது, காவிரித் தண்ணீர் வந்த பிறகு தெளிப்பு உள்ளிட்ட பல்வேறு வகைகளில் நெல் பயிர் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2015 சம்பா பருவ காலத்திலும் இதே அளவில் விவசாயிகள் நெல் பயிரிட்டனர். ஆனால், பருவமழையால் விவசாயம் பாதிக்கப்பட்டது. அரசுத் தரப்பும் காரைக்கால் பகுதியில் பெய்த பலத்த மழையால் 4,253 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் பாதிக்கப்பட்டதாகவும், ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் எனவும் அறிவித்தது. மாவட்டத்தில் அம்பகரத்தூர், நல்லம்பல், சேத்தூர் உள்ளிட்ட சில இடங்களில் ஆழ்குழாய் பாசனம் மூலம் காவிரித் தண்ணீர்

வரத்துக்கு முன்னரே பயிரிடும் பணி தொடங்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் பயிர் நல்ல நிலையில் விளைந்து அறுவடைக்குத் தயாராகியுள்ளது.

கோட்டுச்சேரி பகுதியில் மேலவெளி உள்ளிட்ட சுற்று வட்டாரத்திலும், விழுதியூர், நெடுங்காடு உள்ளிட்ட சில பகுதியிலும், நிலத்தில் புகுந்த தண்ணீரை வெளியேற்றி, தகுந்த உரங்களிட்டு விவசாயிகள் பயிரைக் காப்பாற்றியதாக தெரிவிக்கின்றனர். இவ்வாறு இயற்கைப் பேரிடரையும் தாங்கி வளர்ந்த பயிர்கள் பல இடங்களில் அறுவடைக்குத் தயார் நிலைக்கு வந்துள்ளன. பல இடங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டதை தெளிவாகக் காணமுடிகிறது. பொதுவாக ஹெக்டேருக்கு 4,500 கிலோ வீதம் மகசூல் கிடைக்க வாய்ப்புண்டு. எனினும், அறுவடை செய்த பின்னரே, இந்த நெல் பயனுள்ளதாக இருக்குமா என்பது தெரியவரும் என்கின்றனர் விவசாயிகள். அதேசமயம், மகசூல் விகிதம் குறைந்தாலும், நெல் கிடைக்க வாய்ப்பிருப்பதாக, பயிரைக் காப்பாற்றிய விவசாயிகள் பலர் கூறுகின்றனர்.

இதுகுறித்து திருநள்ளாறு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை கூறுகையில், கடந்த ஆண்டு ஜனவரி மாத முற்பகுதியிலேயே அறுவடைப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. நிகழாண்டு அதற்கான நடவடிக்கை இல்லை. காவிரித் தண்ணீர் காலதமதமாக வந்ததும், தண்ணீர் வருவதில் தடை ஏற்பட்டதும் பயிர் செய்வதில் தாமதத்தை ஏற்படுத்தியது. அதோடு, பருவமழையால் ஏற்பட்ட பாதிப்பும் சேர்ந்து கொண்டது. காப்பாற்ற முடிந்த இடங்களில் ஓரளவுக்கு பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. தைப் பொங்கல் தினத்துக்கு முன்பாக அறுவடையைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என்றனர். அறுவடைப் பணி நடைபெறும்போது, மாவட்டத்தின் பல இடங்களில் கொள்முதல் நிலையங்களைத் திறக்க புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசு முன்னதாகவே மேற்கொள்ள வேண்டும். அறுவடைக்குப் பிறகு கிடைக்கும் மகசூலைப் பொருத்தே விவசாயிகள் ஆறுதல் அடைவது தெரியவரும்.

நிகழாண்டு அறுவடைத் தாமதத்தால் தைப் பொங்கலில் புது நெல்லை பயன்படுத்தும் நிலை வாய்ப்பிருக்காது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**கோவையில் மீன் விலை வீழ்ச்சி வஞ்சிரம் கிலோவுக்கு ரூ.400 குறைவு**



கோவை

கோவையில் மீன் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. 1000 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வஞ்சிரம் மீன் தற்போது 400 ரூபாய் குறைந்து 600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மீன் விலை வீழ்ச்சி தமிழகத்தில் ராமேஸ்வரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூர், சென்னை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்கள், அண்டை மாநிலமான கேரளாவில் கோழிக்கோடு, எர்ணாகுளம், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்கள், லாரிகள் மூலமாக கோவைக்கு கொண்டு வரப்பட்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கோவையில் மீன் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன்படி கோவையில் நேற்று விற்பனையான

மீன்களின் விலை (கிலோ) விவரம் வருமாறு:- வஞ்சிரம் மீன் ரூ.600, வாவல் மீன் ரூ.450 முதல் ரூ.500 வரை, ஊழி மீன் ரூ.250, கொள்ளி மீன் ரூ.200, மத்தி மீன் ரூ.100, சங்கரா மீன் ரூ.250-க்கும் விற்கப்பட்டது. அயிலை மீன் ரூ.150, நெத்திலி மீன் ரூ.200, பாறை மீன் ரூ.300, விளைமீன் ரூ.300, இறால் மீன் ரகம்-1 ரூ.550, இறால் மீன் ரகம்-2 ரூ.450, நெய்மீன் ரூ.120, நண்டு ரூ.350-க்கும் விற்கப்பட்டது. இதேபோல் அணை மீன்களான ஆவோலி மீன் ரூ.140, கட்லா மீன் ரூ.140, ரோகு மீன் ரூ.140 விற்பனையாகிறது. இது தொடர்பாக மீன் வியாபாரி ஒருவர் கூறியதாவது:- பொங்கல் வரை நீடிக்கும் கோவையில் மீன் விலை குறைந்துள்ளது. குறிப்பாக கிலோ ரூ.1,000 வரை விற்கப்பட்ட வஞ்சிரம் மீன், 400 ரூபாய் குறைந்து தற்போது கிலோ ரூ.600-க்கு விற்பனையாகிறது. இதேபோல் வாவல் மீன் மற்றும் இறால் மீன் விலை கிலோவுக்கு ரூ.200 வரை குறைந்து உள்ளது. மீன் வரத்து எப்போதும் போலவே உள்ளது. தற்போது சபரிமலை சீசன் என்பதால், மீன் விற்பனை சற்று குறைந்துள்ளது. இதனால் விலையும் குறைந்து உள்ளது. பொங்கல் பண்டிகை வரை இந்த நிலை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**வரத்து குறைவு, தேவை அதிகரிப்பால் கோவையில் பூக்கள் விலை கடும் உயர்வு**



கோவை,

வரத்து குறைவு மற்றும் தேவை அதிகரிப்பால், கோவையில் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

பூ ரகங்கள்

கோவை மாவட்டத்தின் முக்கிய பூச்சந்தையாக, பூ மார்க்கெட் பகுதி விளங்குகிறது. கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதிகளான தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, அன்னூர், காரமடை, மேட்டுப்பாளையம் சுற்று வட்டார பகுதிகள் மற்றும் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பூக்கள், இங்கு கொண்டுவரப்பட்டு மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படுகின்றன. அண்டை மாநிலமான கேரளாவுக்கு இங்கிருந்து நாள்தோறும் லாரிகள் மூலமாக பூக்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இந்தநிலையில் கோவையில் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்து காணப்படுகிறது. அதிகபட்சமாக மல்லி, முல்லை, ஜாதிப்பூ ரகங்கள் கிலோ ரூ.1,000–க்கு விற்பனையானது. மற்ற பூ ரகங்களின் விலை விவரம் வருமாறு:–

உற்பத்தி பாதிப்பு

செண்டுமல்லி கிலோ ரூ.30 முதல் ரூ.60 வரையிலும், ஒரு கட்டு ரோஜாப்பூ ரூ.60–க்கும், சம்பங்கி கிலோ ரூ.100–க்கும், செவ்வந்தி கிலோ ரூ.120–க்கும், பட்டுப்பூ கிலோ ரூ.70–க்கும், அரளிப்பூ கிலோ ரூ.200–க்கும், துளசி கிலோ ரூ.20–க்கும், மரிக்கொழுந்து கட்டு ரூ.40–க்கும் விற்பனையானது.

இது தொடர்பாக வியாபாரி ஒருவர் கூறியதாவது:– தற்போது கடும் பனிப்பொழிவு காரணமாக பூக்கள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இரவு முதல் காலை வரை பனிப்பொழிவதாலும், அதற்கு பிறகு வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், பூக்கள் கருகி காய்ந்து காணப்படுகிறது.

விலை அதிகரிப்பு

வழக்கமாக கோவை பூமார்க்கெட்டுக்கு மல்லிப்பூ 2 ஆயிரம் கிலோவும், முல்லைப்பூ 500 கிலோவும், ஜாதிப்பூ 200 கிலோவுக்கு மேலாகவும் வரத்து காணப்படும். ஆனால் கடந்த 2 வாரங்களாக வரத்து மிகவும் குறைந்து காணப்படுகிறது. மல்லிப்பூ 200 கிலோவும், முல்லைப்பூ 100 கிலோவும், ஜாதிப்பூ 50 கிலோவுக்கு குறைவாகவே வருகிறது.

தற்போது சபரிமலை சீசன் என்பதால், கோவில்களில் தொடர்ச்சியாக பூஜைகள் நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் அருகில் உள்ள கோவில்களில் இருமுடி கட்டி சபரிமலைக்கு சென்று வருகிறார்கள். இதனால் பூக்கள் தேவை அதிகமாக உள்ளது. தேவை அதிகமாகவும், உற்பத்தி குறைவாகவும் இருக்கும் காரணத்தால் பூக்கள் விலை அதிகரித்து உள்ளது. இந்தநிலையில் வருகிற 15–ந் தேதி பொங்கல் பண்டிகை வருகிறது. இதேநிலை நீடித்தால், பொங்கல் பண்டிகைக்கு பூக்கள் விலை மேலும் உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சீர்காழி அருகே அறுவடைக்கு தயாராக உள்ள கரும்புகள்**



செம்பனார்கோவில், சீர்காழி அருகே பொங்கல் பண்டிகையைமுன்னிட்டு கரும்புகள் அறுவடைக்கு தயாராக உள்ளன. பொங்கல் பண்டிகை நம் முன்னோர்கள் மனிதன் சாப்பிடும் உணவு வகைகளை குறிப்பிட்ட மாதங்களில் மட்டும் கண்டிப்பாக சாப்பிடும் வகையில் பண்டிகைகளை வகுத்துள்ளனர். நமது உடலில் கசப்பு, உவர்ப்பு, மற்றும் இனிப்பு வகைகள் சேர வேண்டும் என்பது மருத்துவ வல்லுனர்களின் கருத்தாகும். இனிப்பு தயாரிக்க கரும்பு மிகமுக்கிய மூலபொருளாக விளங்குகிறது. இந்த கரும்பை கொண்டு

பல்வேறு பொருட்கள் செய்யப்படுகின்றன. கரும்பை சாப்பிடுவதால் வயிற்று கோளாறுகள், பல் நோய்கள் நீங்குகிறது. தமிழர்களின் மிக முக்கிய பண்டிகையாக விளங்குவது பொங்கல் பண்டிகை. இந்த பண்டிகையில் மிக முக்கிய பங்கு வகிப்பது செங்கரும்புகள். குழந்தைகள் விரும்பி சாப்பிடும் பொருளாக கரும்பு விளங்குகிறது. 500 ஏக்கரில்... வருகிற 15-ந் தேதி பொங்கல் பண்டிகை வருகிறது. இதையொட்டி கரும்புகள் நாகை மாவட்டம் சீர்காழி அருகே செம்பதனிருப்பு, அல்லிவிளாகம், காத்திருப்பு, ராதாநல்லூர், கீழையூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 500 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்புகள் விற்பனைக்காக அறுவடைக்கு தயாராகி வருகிறது. இந்த ஆண்டு கரும்புக்கு அதிக விலை கிடைக்கும் சூழ்நிலை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**திருச்செங்கோட்டில் ரூ.90 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**



திருச்செங்கோட்டில் 1,500 மூட்டை மஞ்சள் ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனது. மஞ்சள் ஏலம் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து

விவசாயிகள் ஆயிரத்து 500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்து வியாபாரிகள் வந்து இருந்தனர். ரூ.90 லட்சத்துக்கு விற்பனை

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.8 ஆயிரத்து 199 முதல் ரூ.11 ஆயிரத்து 8 வரையும், கிழங்கு ரகம் ரூ.7 ஆயிரத்து 506 முதல் ரூ.9 ஆயிரத்து 711 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 19 முதல் ரூ.18 ஆயிரத்து 219 வரையும் விற்பனை செய்யப்பட்டன. மொத்தம் 1,500 மூட்டை மஞ்சள் ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கோத்தகிரி பகுதியில் 'பேஷன் புரூட்' விளைச்சல் அமோகம்**



கோத்தகிரி,

கோத்தகிரி பகுதியில் 'பேஷன் புரூட்' விளைச்சல் அமோகமாக உள்ளது. பழங்கள் நீலகிரி மாவட்டத்தில் வால்பேரிக்காய், ரம்பூட்டான், பிளம்ஸ், பேஷன் புரூட், ஆப்பிள் உள்பட பல்வேறு வகையான பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. ஒரு சில இடங்களில் விவசாயிகள் தோட்டங்களில்

பழ மரங்களை நட்டு வளர்த்து வருகிறார்கள். பொதுமக்கள் சிலரும் தங்களது வீடுகளில் பழ மரங்களை நட்டுள்ளனர். இந்த நிலையில் கோத்தகிரி பகுதியில் கிளப் ரோடு மற்றும் ரைபிள் ரேஞ்ச் பகுதிகளில் உள்ள வீடுகளில் 'பேஷன் புரூட்' பழ மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. தற்போது மருத்துவ குணம் கொண்ட 'தாட்பூட்' என அழைக்கப்படும் பேஷன் புரூட் விளைச்சல் அமோகமாக உள்ளது. பழச்சாறு இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:- பேஷன் புரூட் பழங்கள் கோத்தகிரி பகுதியில் உள்ள சீதோஷ்ண நிலைக்கு நல்லமுறையில் வளரும் தன்மை உடையது. இந்த பழத்தை மாதுளம் பழத்தை போலவே விதையுடன் சாப்பிடலாம். இதில் வைட்டமின் ஏ மற்றும் சி, நார்சத்து காணப்படுகிறது. பழத்தின் தோலை நீக்கி பழச்சாறாக இரவு நேரத்தில் குடித்தால் நல்ல தூக்கம் வருவதுடன் இயற்கையான முறையில் உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது. மேலும் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. தற்போது ஒரு கிலோ பழம் விவசாயிகளிடம் இருந்து ரூ.40 முதல் ரூ.50 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. கடைகளில் ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. பேஷன் புரூட் பழத்தின் நாற்றுகள் குன்னூர் பழப்பண்ணையில் விவசாயிகள், பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இதனை நட்டு வைத்து வளர்த்தால் சில ஆண்டுகளிலேயே நல்ல பலனை தருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**சம்பா நெல் அறுவடை பணிகள் தொடங்கியது எக்டேருக்கு சராசரியாக 5,500 கிலோ வரை மகசூல்**



தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. எக்டேருக்கு சராசரியாக 5,500 கிலோ மகசூல் கிடைத்துள்ளது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். வழக்கமாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து ஜூன் மாதம் 12-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்படும். ஆனால் இந்த ஆண்டு தாமதமாக ஆகஸ்டு மாதம் 9-ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கல்லணையை வந்தடைந்ததும், கல்லணையில் இருந்து பாசனத்துக்காக 13-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் 40 ஆயிரம் எக்டேரில் குறுவை நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை. 34 ஆயிரத்து 47 எக்டேரில் சாகுபடி நடைபெற்றது.

சம்பா, தாளடி சாகுபடி தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால் சம்பா சாகுபடியின் பரப்பளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 32 ஆயிரம் எக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி நடைபெறும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் சம்பா, மற்றும் தாளடி சாகுபடி 1 லட்சத்து 28 ஆயிரத்து 236 எக்டேரில் நடவு செய்யப்பட்டது. இதில் நீண்டகால நெல் ரகமான சாவித்திரி, மத்திய கால நெல் ரகமான பி.பி.டி.5204, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, கோ 50 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டன. நவம்பர் மாதம் இறுதி வரை சம்பா, தாளடி நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது தஞ்சை மாவட்டத்தில் முன்பட்ட சம்பா அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒரத்தநாடு, சூரக்கோட்டை, தஞ்சை போன்ற பகுதிகளில் தற்போது அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன. எந்திரம் மூலம் அறுவடைப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அரிதாக ஒருசில இடங்களில் தொழிலாளர்கள் அறுவடை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 150 எக்டேரில் முடிந்தது தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 150 எக்டேரில் சம்பா அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த பகுதிகளில் எக்டேருக்கு சராசரியாக 5 ஆயிரத்து 500 கிலோ வரை மகசூல் கிடைத்துள்ளது. தொடர்ந்து பல்வேறு இடங்களில் அறுவடைபணிகள் நடைபெற்று வருகின்றன. மகசூல் பாதிப்பு இது குறித்து விவசாயிகள் கூறுகையில், “இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டால் சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்றன. இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் 20-ந்தேதி வரை தொடர்ந்து பெய்ததால் பல்வேறு இடங்களில் சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியதாலும், கதிர்வரும் நேரத்தில் தொடர்ந்து மழை பெய்ததாலும் நெற்பயிர்கள் பதராக காணப்பட்டது. இதனால் பல்வேறு இடங்களில் நெல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது”என்றனர்.

**வெள்ளகோவில் வாரச்சந்தை க்கு முருங்கைக்காய் வரத்து இல்லாததால் வியாபாரிகள் ஏமாற்றம்**



வெள்ளகோவில், வெள்ளகோவிலில் ஞாயிற்றுகிழமை தோறும் கூடும் வாரச்சந்தைக்கு விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் விளைவித்த முருங்கைக்காயை கொண்டு வந்து விற்பனை செய்வார்கள். 50–க்கும் மேற்பட்ட வியாபாரிகள், வந்திருந்து முருங்கைக்காயை விலை வைத்து வாங்கி லாரிகளில் ஏற்றி சென்னை உட்பட வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைப்பார்கள். 50 டன் வரை சந்தைக்கு முருங்கைக்காய் விற்பனைக்கு வரும். சீசன் முடிந்ததால் நேற்று ஞாயிறு கூடிய சந்தைக்கு சுமார் 100 கிலோகாய்கள் தான் விற்பனைக்கு வந்தது. அதுவும் தரமான காய்கள் இல்லை. அதுவும் கருப்பு நிறத்தில் காணப்பட்டது. திருச்சியில் இருந்து ஒரு சில வியாபாரிகள் மட்டும் வந்திருந்தனர். நல்ல பச்சை நிற காய்களை 1 கிலோ 100–க்கு வாங்கினர். கலர் மாறிய காய்களையும் கிலோ ரூ.80–க்கு வியாபாரிகள் வாங்கிச்சென்றனர். முருங்கை மரம் இப்போது தான் பூ பிடித்துள்ளது பிப்ரவரி மாதக் கடைசியில்தான் வழக்கம் போல் காய் விற்பனைக்கு வரும் என விவசாயிகள் கூறினர். ஞாயிறு சந்தையில், பீர்க்கன் காய் 1 கிலோ ரூ. 80, தக்காளி ரூ.40, சி.வெங்காயம் ரூ.20, பெ.வெங்காயம் ரூ.25, வெண்டை ரூ.40,

கத்தரி ரூ.40, பாகற்காய் ரூ.50, புடலங்காய் ரூ.35, அவரைக்காய் ரூ.40, பீட்ரூட் ரூ.40, கேரட் ரூ.100, உருளை கிழங்கு ரூ.25, பச்சை மிளகாய் ரூ.65க்கு விற்பனை செய்யப்பட்டது. குறைந்த விலையாக சின்னவெங்காயம் கிலோ ரூ.20–க்கும், அதிக விலையாக கேரட் கிலோ ரூ.100–க்கும் விற்பனையானது.

தினகரன்

**கொச்சியில் நடைபெற்ற மலர் கண்காட்சி : ஏராளமானோர் கண்டு ரசிப்பு**



கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற 34-வது மலர் கண்காட்சியை ஏராளமானோர் கண்டு ரசித்தனர். மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் இந்த மலர் கண்காட்சி நடைபெற்றது. 5000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்த மலர் கண்காட்சியில் 20 ஆயிரம் மலர்ச்செடிகள்

வைக்கப்பட்டிருந்தன. 2 ஆயிரம் சட்டிகளில் வைக்கப்பட்டிருந்த அந்தோரியம் என்ற ஒருவகை மலர்களும், 15 ஆயிரம் சட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சாமந்தி, டக்ளியா உள்ளிட்ட பல்வேறு வண்ண மலர்களும் கண்காட்சியை அலங்கரித்தன.

இந்த மலர் கண்காட்சியை கேரள மாநில தோட்டக்கலைத் துறையும் இணைந்து ஆண்டு தோறும் நடத்தி வருகிறது. மலர்களில் பல வண்ணங்களும் அதில் இருந்து வந்த மனமும் பார்வையாளர்களை கிறங்க வைத்தது. இந்த கண்காட்சியை ஏராளமானோர் திரண்டு கண்டு ரசித்தனர்.

**தண்ணீரின்றி சம்பா பயிர்கள் கருகும் அபாயம் : விவசாயிகள் கவலை**



திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதியில் போதிய தண்ணீர் இன்றி சம்பா பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நீடாமங்கலம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சாத்தனூர், பாப்பாக்குடி, மாணிக்கமங்கலம், வேடம்பூர், ஆலங்குடி உள்ளிட்ட இடங்களில் 2500 ஏக்கரில் சம்பா நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது போதிய தண்ணீர் இல்லாததால் சம்பா நெற்பயிர் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வெள்ளாற்றில் கூடுதல் தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெற்பயிர்கள் கருகுவதால் மகசூல் இழப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதால் சாகுபடி தொடங்கும் போதே நெருக்கடியை சந்தித்த விவசாயிகள் தற்போது வெள்ளாற்று பாசனத்தில் உள்ள புலவனாறு வாய்க்காலில் தண்ணீர் பாயாததால் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

**தமிழகத்தில் 20 அணைகளின் நீர் கொள்ளளவு பாதியாக சரிவு**



தமிழகம் முழுவதும் சிறியதும் பெரியதுமான 120 அணைகள் உள்ளது. இதில், பொதுப்பணித் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் 89 அணைகளும், மற்ற அணைகள் மின் வாரிய கட்டுப்பாட்டில் உள்ளது. இதில், பல ஆண்டுகளாக தூர்வாரப்படாத 107 அணைகளை புனரமைக்க, 2012ல் தமிழக அரசு முடிவு செய்தது. ரூ.745 கோடி செலவில் 80 சதவீதம் உலக வங்கி கடனுதவியுடனும், 20 சதவீதம் மாநில அரசின் நிதியுதவி கீழ் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இதில், அணைகளின் படிந்துள்ள மண்படிமம் குறித்து திருவள்ளூர், மாவட்டம், பூண்டியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், கோவை மாவட்டம், பொள்ளாச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நீர்முகடு மேலாண்மை வாரியம் ஆகிய நிறுவனங்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. இதற்காக, 1.45 கோடி அரசு ஒதுக்கியது.

இந்த ஆய்வின் முடிவில் கோவை மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம், தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம், சேலம் மாவட்டம், ஆனைமடுவு அணை, கிருஷ்ணகிரி மாவட்டம் பாம்பார் அணை, திருநெல்வேலி மாவட்டம் வடக்கு பச்சையாறு, நம்பியாறு, விருதுநகர் மாவட்டம், கோல்வார்பட்டி, பிளவுக்கல் பெரியாறு, ஆனைக்குட்டம் அணைகள், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் உட்பட 20 அணைகளில் நீர் கொள்ளளவு, பாதியாகக் குறைந்து இருப்பதாக ஆய்வின் முடிவில் தெரிய வந்துள்ளது. இவற்றில், போதிய அளவு தண்ணீரைத் தேக்கி, பாசனத்திற்கும், குடிநீர் தேவைக்கும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதுகுறித்து, நீர்வளத்துறை துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, ‘அணைகள் மேம்பாட்டு மற்றும் பாதுகாப்பு இயக்ககத்தின் மூலம் 107 அணைகளில் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இதில், அணைகளில் படிந்துள்ள மண்படிவம் குறித்து லேசர் தொழில்நுட்பம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அணையின் அடிமட்டத்தில் இருந்து தற்போது வரை, எவ்வளவு மண்படிவம் உள்ளது என்பது கண்டறியப்பட்டது. 20 அணைகளிலும், நீர் கொள்ளளவு பாதியாகக் குறைந்து இருப்பது தெரிய வந்துள்ளது’ என்றார்.

**மானாவாரியில் பயிரிட பருத்தி உகந்தது வேளாண்துறை ஆலோசனை**

மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ 5166, சுமங்கலா, கே 11, எஸ்.வி.பி.ஆர் 2, கே.சி 2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45*15 சென்டி மீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள் வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளிலிருந்து

பயிரினை காத்து ஆரம்பத்தில் பயிர் வளர்ச்சி அடைய முடியும். நுண் ஊட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்பேது, 60 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இடவேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இடவேண்டும். மேற்காணும் உரத்தில் மணிச்சத்து முழுவதும் மற்றும் தழைச்சத்து, சாம்பல் சத்தினை பாதி அடியுரமாகவும் இட வேண்டும். களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்ைபரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இடவேண்டும். ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின்பு உரமிட வேண்டும். பரிசோதனை செய்யாத நிலங்களுக்கு களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோராலின் 2.2 லிட்டர், பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.அடி உரமாக எக்டேருக்கு 50 கிலோ சிங்க் சல்பேட் அளித்தால் நுண் ஊட்டசத்து அளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**நிரம்பும் நிலையில் ராமக்காள் ஏரி விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரியில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் ராமக்காள் ஏரி நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பி அப்பகுதியில் விவசாய பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. தர்மபுரி - கிருஷ்ணகிரி சாலை மதிகோன்பாளையத்தில் ராமாக்காள் ஏரி உள்ளது. சுமார் 265 ஏக்கர் பரப்பளவில் கொண்ட இந்த ஏரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். கடந்த சில மாதங்களுக்கு முன் ராமக்காள் ஏரி

வறண்டது. இதனால் ஆடு, மாடு, மேய்ச்சல் நிலமாக மாறியது. இந்நிலையில், கடந்த மாதம் மற்றும் அவ்வவ்போது பெய்து வரும் மழையால் ராமக்காள் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், வறண்டு கிடந்த ராமக்காள் ஏரி, தற்போது நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பியுள்ள சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ராமக்கா ஏரிக்கு வரும் கால்வாய் பகுதிகள், ஆக்கிரமிப்பால் நீர் வரத்து குறைந்து காணப்பட்டது. தற்போது பெய்து வரும் மழையால் ஏரியில் மழைநீர் தேங்கியுள்ளது. இதை நம்பி நெல், கரும்பு சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் கிணறு, ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது என்றனர்.

**திருவெறும்பூர் பகுதியில் நேந்திரன் வாழைக்காய் அறுவடை பணி தீவிரம்**

திருச்சி திருவெறும்பூர் பகுதியில் நேந்திரன் வாழைக்காய் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. திருவெறும்பூர் அடுத்த கல்லணையின் நடு கரை பகுதியான திருவளர்ச்சோலை, பனையபுரம், உத்தமர்சீலி, கிளிக்கூடு உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நேந்திரன், ராணி பூவன் வாழைக்காய்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தற்போது காய்கள் நன்றாக வளர்ந்துள்ளதால் அறுவடை பணி துவங்கி தீவிரமாக நடந்து வருகிறது. சிப்ஸ் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்க பயன்படுவதால் கேரளாவில் நேந்திரன் வாழைக்கு நல்ல மவுசு உள்ளது. அங்கு ஒரு கிலோ ரூ.32 வரை விற்பனை ஆகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் அறுவடை செய்து கேரளா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்து வருகின்றனர். மேலும் நல்ல விலை கிடைக்க வேண்டும் என்றால் திருச்சியில் வாழைக்காய் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

**அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி பணிகள் தீவிரம்**

அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். உடுமலை அருகே உள்ள அமராவதி அணையால் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அதுதவிர கல்லாபுரம், ராமகுளம் ராஜவாய்க்கால் பாசனத்தில் 3500 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன. நெல்,கரும்பு,தென்னை மற்றும் காய்கறிகள் முக்கிய சாகுபடி பயிர்கள். ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் மாதம் வரை பழைய ஆயக்கட்டில் ஆற்றிலும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டில் பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஜூலை மாதம் 19ம் தேதி பழைய ஆயக்கட்டுக்கு ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. மடத்துக்குளம்,குமரலிங்கம்,சர்க்கார் கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி,கணியூர்,கடத்தூர்,காரத்தொழுவு ஆகிய கால்வாய் பாசத்தில் ஏறத்தாழ 11 ஆயிரம் ஏக்கர் நிலத்திலும், கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் பாசனத்திலும் முதல்போக நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த செப்டம்பரில் அறுவடை முடிந்தது. வடகிழக்கு பருவமழையால் தற்போது அமராவதி அணை நிரம்பி உள்ளது. நாலைந்து ஆண்டுகளுக்குப்பிறகு இப்போதுதான் அணை நிரம்பி உள்ளது. எனவே பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற உறுதியில் விவசாயிகள் 2ம் போக நெல்சாகுபடியை துவக்கி உள்ளனர். தற்போது நாற்று நடவுப்பணி தீவிரமாக நடக்கிறது.

**கொத்தமல்லி சாகுபடியில் நல்ல மகசூல்: விவசாயிகள் மகிழ்ச்சி**

உடுமலை பகுதியில் கொத்தமல்லி சாகுபடியில் நல்ல மகசூல் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலையை அடுத்துள்ள வாளவாடி, அந்தியூர், வடபூதனத்தம், குருஞ்சேரி,கொங்கல்நகரம் உள்ளிட்ட பகுதிகளில் கொத்தமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இது 2 மாத பயிராகும். ஏக்கருக்கு ரூ.15ஆயிரம் வரை செலவு செய்து விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். செடிகளில் கொத்துக்,கொத்தாக பூக்கள் பூத்துள்ளன. இதனால் நல்ல மகசூல் கிடைக்கும்

என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ஏக்கருக்கு 40 கிலோ எடையில் 13 மூட்டை வரை மகசூல் கிடைக்கும். ஒரு மூட்டை கொத்தமல்லி விலை ரூ.3500. எனவே இந்த சீசனில் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் விவசாயிகள் உள்னனர்.

**வலங்கைமான் பகுதியில் நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

மழைக்கு பின் நெற்பயிரில் தோன்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார். இது குறித்துவலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை. வலங்கைமான் வட்டாரத்தில் வடகிழக்கு பருவமழையால் சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் சூழ்ந்த நீர் வடிந்த நிலையில் தற்போது பூச்சி மற்றும் நோய் தாக்குதல் சில இடங்களில் தென்படுகிறது. தற்போதைய காலநிலையில் நெற்பயிரில் தோன்றும் குருத்துபூச்சி மற்றும் இலைசுருட்டுபுழுவை கட்டுபடுத்த ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு என்ற மருந்தை 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இளம்பயிரில் காணப்படும் ஆனை கொம்பன் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 500 மிலி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். தற்போது நிலவும் பருவமழையின் காரணமாக நெற்பயிரில் பாக்டீரியல் இலைகருகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைகட்டுபடுத்த 20 சதம் பசும்சாண கரைசலை தெளிக்க வேண்டும். 40 கிலோ பசும் சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊரவைத்து அதனுடன் 1 கிலோ சூடோமோனாசை இட்டு கலக்க வேண்டும். அடுத்த நாள் தெளிந்த சானகரைசலை வடிகட்டி 100 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளிக்க வேண்டும். அல்லது 1 கிலோ சூடோமோனாசை 1 லிட்டர் புளித்த தயிருடன் 200 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளித்து கட்டுபடுத்தலாம். மேலும் விபரங்களை அருகில் உள்ள வேளாண்விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்.

**நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை**

வலங்கைமான்.: மழைக்கு பின் நெற்பயிரில் தோன்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார். இது குறித்துவலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை. வலங்கைமான் வட்டாரத்தில் வடகிழக்கு பருவமழையால் சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் சூழ்ந்த நீர் வடிந்த நிலையில் தற்போது பூச்சி மற்றும் நோய் தாக்குதல் சில இடங்களில் தென்படுகிறது. தற்போதைய காலநிலையில் நெற்பயிரில் தோன்றும் குருத்துபூச்சி மற்றும் இலைசுருட்டுபுழுவை கட்டுபடுத்த ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு என்ற மருந்தை 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இளம்பயிரில் காணப்படும் ஆனை கொம்பன் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 500 மிலி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். தற்போது நிலவும் பருவமழையின் காரணமாக நெற்பயிரில் பாக்டீரியல் இலைகருகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைகட்டுபடுத்த 20 சதம் பசும்சாண கரைசலை தெளிக்க வேண்டும். 40 கிலோ பசும் சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊரவைத்து அதனுடன் 1 கிலோ சூடோமோனாசை இட்டு கலக்க வேண்டும். அடுத்த நாள் தெளிந்த சானகரைசலை வடிகட்டி 100 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளிக்க வேண்டும். அல்லது 1 கிலோ சூடோமோனாசை 1 லிட்டர் புளித்த தயிருடன் 200 லிட்டர் தண்ணீரில் சேர்ந்து தெளித்து கட்டுபடுத்தலாம். மேலும் விபரங்களை அருகில் உள்ள வேளாண்விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்.

**விவசாயிகளுக்கு நல உதவி வழங்கல்**

மாவட்ட வேளாண் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு ரூ.1.19 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இலுப்பூர் வேளாண் விற்பனைக்கூட வளாகத்தில் வேளாண்மைத்துறையின் சார் விவசாயிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நேற்று நடந்தது. கலெக்டர் கணேஷ் தலைமை வகித்தார். அமைச்சர் விஜயபாஸ்கர் விவசாயிகளுக்கு நலத்திட்ட எதவிகளை வழங்கினார். விழாவில் அன்னவாசல் மற்றும் விராலிமலை வட்டாரத்திற்குட்பட்ட தேசிய

வேளாண் வளர்ச்சித்திட்டம் 2015-16ன் கீழ் 60 விவசாயிகளுக்கு ரூ.97 லட்சத்தில் மானிய விலையில் பவர் டிரில்லர்கள் கருவிகள், 200 விவசாயிகளுக்கு ரூ.6 லட்சத்தில் மானிய விலையில் இயந்திர நெல் நடவு தொழில்நுட்பங்கள், தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கத்தின் கீழ் முதற்கட்டமாக 58 விவசாயிகளுக்கு ரூ.15.95 லட்சம் மானியத்தில் கறவை மாடுகள் மற்றும் பயிர் சாகுபடிக்கான இடுப்பொருட்களும் என ஆக மொத்தம் 318 விவசாயிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன், இலுப்பூர் ஆர்டிஓ வடிவேல்பிரபு உள்ளிட்ட பல அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**கருமாண்டிசெல்லிபாளையம் மஞ்சள் வணிக வளாகத்தில் இன்று ஏலம் துவங்குகிறது**

ஈரோடு சுண்ணாம்பு ஓடை பகுதியில் வாடகை கட்டிடத்தில் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம் இயங்கி வந்தது. இந்த கட்டிடத்தில் தான் இதுவரையிலும் அரசு சார்பிலான மஞ்சள் ஏலம் நடந்து வந்தது. இந்நிலையில் கடந்த திமுக ஆட்சி காலத்தில் பெருந்துறை அருகிலுள்ள கருமாண்டிசெல்லிபாளையம் பகுதியில் அரசு சார்பிலான ஒழுங்குமுறை விற்பனை கூடமும், மஞ்சள் வணிக வளாகமும் கட்ட திட்டமிடப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. படுமந்தமாக நடைபெற்று வந்த அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் மஞ்சள் வளாகம் கட்டும் பணி ஒருவழியாக நிறைவு பெற்று கடந்த 28ம் தேதி தமிழக முதல்வர் ஜெயலலிதா வீடியோகான்பிரன்சிங் முறையில் திறந்து வைத்தார். தேசிய நெடுஞ்சாலை 47ல் ரூ.6.62 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த மஞ்சள் வணிக வளாகத்தில் தலா 1000 மெட்ரிக் டன் வீதம் கொள்ளளவு கொண்ட இரண்டு கிடங்கியும், 3 பரிவர்த்தனை கூடமும், 2 உலர் களங்கள், ஒரு அலுவலக கட்டிடம் மற்றும் கூட்ட அரங்கமும், வங்கி கட்டிடமும் மற்றும் வியாபாரிகள் ஓய்வறையும், உணவு விடுதி மற்றும் விவசாயிகள் ஓய்வறையும் கட்டப்பட்டுள்ளது. இதுதவிர 60 மெட்ரிக் டன் வரை எடை போடக்கூடிய எடை மேடையும், 2 கழிவறை தொகுப்புகள், ஆழ்துளை கிணறுடன் கூடிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, 3 எண்ணிக்கையில் வாகன நிறுத்துமிடம்,

சுற்றுச்சுவருடன் கூடிய காங்கிரீட் சாலை வசதி, வடிகால் உள்ளிட்டட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த மஞ்சள் வணிக வளாகத்தில் இன்று (4ம் தேதி) முதல் மஞ்சள் ஏலம் துவங்கும் என வேளாண் விற்பனைக்குழுவினர் ஏற்கனவே அறிவித்துள்ளனர். அதன்படி இன்று முதல் கருமாண்டிசெல்லிபாளையம் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அரசு சார்பிலான மஞ்சள் ஏலம் நடைபெறும். இதுதவிர வழக்கம் போல செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் வணிக வளாகத்தில் தனியார் மஞ்சள் ஏலமும் நடைபெறும்.

**கோவையில் வேளாண் கண்காட்சி அறிமுக விழா மத்திய அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா துவக்கினார்**

கோவை கொடிசியா சார்பில் வரும் ஜூலையில் நடைபெறவுள்ள வேளாண் கண்காட்சிக்கான துவக்க விழா நேற்று கோவையில் நடந்தது. இதை மத்திய அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா துவக்கி வைத்தார். கோவை கொடிசியா சார்பில் வரும் ஜூலை 15ம் தேதி முதல் 18ம் தேதி வரை கோவையில் வேளாண் கண்காட்சி (அக்ரி இன்டெக்ஸ் 2016) மற்றும் கயறு கண்காட்சி நடக்க உள்ளது. அதற்கான துவக்கவிழா நேற்று கொடிசியாவில் நடந்தது. இதில் கொடிசியா செயலாளர் திருஞானம் வரவேற்றார். கொடிசியா தலைவர் பொன்னுசாமி தலைமை வகித்தார். வேளாண் பல்கலை துணை வேந்தர் ராமசாமி, வேளாண் கண்காட்சி தலைவர் சசிகுமார், கயறு கண்காட்சி தலைவர் அஜித்குமார், கண்காட்சி செயலாளர் குமாரராஜா, முன்னாள் எம்.பி.,ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். இதில் வேளாண் கண்காட்சி மற்றும் கயறு கண்காட்சி விளக்க கையேட்டை மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா வெளியிட்டார். பின்னர் ழில்துறையினருடனான கலந்துரையாடல் நடந்தது. இதில் கோவையிலுள்ள பல்வேறு தொழில் அமைப்பின் நிர்வாகிகள் அமைச்சரிடம் கோரிக்கை மனுக்களை அளித்தனர். பின்னர் அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா பேசுகையில், 'கோரிக்கை மனுக்கள் மீது உரிய தீர்வு காணப்படும். குறு, சிறு தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு மானிய திட்டங்களும், அதற்கான நிதியும் போதுமான அளவில் உள்ளது. இதை குறு, சிறு தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தொழில்

வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவ தயாராக இருக்கிறது' என்றார். கொடிசியா தலைவர் பொன்னுசாமி கூறுகையில், 'வேளாண் கண்காட்சியில் தேசிய, சர்வதேச கயறு கண்காட்சி முக்கியத்துவமாக இடம்பெறுகிறது. கண்காட்சியில் இடம்பெறவுள்ள அரங்குகளுக்கான புக்கிங்கை மத்திய அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா துவக்கி வைத்துள்ளார். முதல்கட்டமாக கண்காட்சியின் ஸ்பான்ஸர் நிறுவனங்கள் புக்கிங் செய்து துவக்கி வைத்துள்ளனர். தொடர்ந்து கொடிசியாவின் அனைத்து ஹால்களிலும் அரங்குகள் நிரம்பும் வகையில் புக்கிங் நடைபெறவுள்ளது' என்றார்.

**அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி பணிகள் தீவிரம்**

அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். உடுமலை அருகே உள்ள அமராவதி அணையால் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அதுதவிர கல்லாபுரம், ராமகுளம் ராஜவாய்க்கால் பாசனத்தில் 3500 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன. நெல்,கரும்பு,தென்னை மற்றும் காய்கறிகள் முக்கிய சாகுபடி பயிர்கள். ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் மாதம் வரை பழைய ஆயக்கட்டில் ஆற்றிலும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டில் பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஜூலை மாதம் 19ம் தேதி பழைய ஆயக்கட்டுக்கு ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. மடத்துக்குளம்,குமரலிங்கம்,சர்க்கார் கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி,கணியூர்,கடத்தூர்,காரத்தொழுவு ஆகிய கால்வாய் பாசத்தில் ஏறத்தாழ 11 ஆயிரம் ஏக்கர் நிலத்திலும், கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் பாசனத்திலும் முதல்போக நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த செப்டம்பரில் அறுவடை முடிந்தது. வடகிழக்கு பருவமழையால் தற்போது அமராவதி அணை நிரம்பி உள்ளது. நாலைந்து ஆண்டுகளுக்குப்பிறகு இப்போதுதான் அணை நிரம்பி உள்ளது. எனவே பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற உறுதியில் விவசாயிகள் 2ம் போக நெல்சாகுபடியை துவக்கி உள்ளனர். தற்போது நாற்று நடவுப்பணி தீவிரமாக நடக்கிறது.

**நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு**

பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டாரம் காரியாவிடுதி கிராமத்தில் வேளாண்மைத்துறை மூலம் அட்மா விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நெல் சாகுபடி செய்யும் 25 விவசாயிகளுக்கு நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் செந்தில்குமார் கலந்து கொண்டு பண்ணைப் பள்ளி விவசாயிகளுக்கு நெல் சாகுபடியில் மண்ணுக்கு ஏற்ற பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை தேர்வு செய்யும் முறைகளை பற்றியும், நெற்பயிரினை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றியும், பூச்சிகளின் வாழ்க்கை சூழல் பற்றியும், தீமை பூச்சிகளை கண்டறிந்து உயிரியில் முறையில் கட்டுப்படுத்தும் முறைகளான விளக்குப்பொறி இனக்கவர்ச்சிப்பொறி வைத்தல் ஆகியனவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றியும், பூச்சி மற்றும் நோய் தாக்குதலின் அறிகுறிகளை கண்டறிதல், பொருளாதார சேதநிலை கண்டறிதல், வேப்பங்கொட்டை கரைசல் மூலம் கட்டுப்படுத்தும்முறை மற்றும் அதன் பயன்கள் பற்றியும் கையடக்கக்கணினியின் மூலம் படங்களுடன் விளக்கி விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அதனை தொடர்ந்து உர மேலாண்மை முறைகளில் ஒன்றான இலைவண்ண அட்டையினை பயன்படுத்தி நெற்பயிரில் தழை உரமிடுதல் பற்றிய தொழில்நுட்பத்தினை விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வயலில் செயல்விளக்கமாக திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் செய்து காண்பித்தார். வேளாண்மை அலுவலர் முருகேசன், தற்போதைய தட்ப வெப்ப நிலையை கருத்தில் கொண்டு பயிருக்கு பயிர் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சூடோமோனாஸ் புளுரோசன்ஸ் பாக்டீரியா உயிர்க்கொல்லி மருந்து தெளிப்பு பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரெத்தினம், நெடுஞ்செழியன் ஆகியோர் செய்திருந்தனர்.

**சிறுதானிய பயிர் மானாவாரியாக பயிர் செய்தால் அதிக வருமானம்**

சிறுதானியங்கள் மானாவரியாக பயிர் செய்தால் விவசாயிகள் அதிக வருமானம் சம்பாதிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.நீர் மேலாண்மை பயிற்சி நிலைய, வேளாண் துணை இயக்குநர் இந்திராகாந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தமிழ்நாட்டில், குறிப்பாக மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, ராமநாதபுரம், மாவட்டங்களில் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளாகவும், வறட்சி தாங்கி, எல்லா விதமான மண்ணிலும், வளரும் பயிராக சிறுதானியங்கள் உள்ளந. குறிப்பாக கம்பு, சோளம், குதிரைவாலி, சாமை உள்ளிட்ட சிறுதானியங்களை லேசான மழை பெய்யும் சமயத்தில் உழவு செய்த பிறகு, தொழு உரங்கள் லேசாக இட்டு, சிறுதானிய விதைகளை போட்டால் போதும், லேசான மழை இரண்டு முறை பெய்தால் சிறுதானியங்கள் நன்றாக வளர்ந்து விடும். அதே சமயத்தில் தமிழ் மாதங்கள் சித்திரை, ஆடி, மார்கழி பட்டங்களில், மானாவரியாக சிறுதானியங்கள் பயிர் செய்தால் நன்றாக வளர்ந்து விளைச்சல் தந்து விடும், அதிக லாபம் தரும் இந்த சிறுதானியங்கள் சத்தானதகவும், சுவையானதாகவும், நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்தாகவும், சர்க்கரை நோயாளிகள் அதிகம் விரும்பி உண்ணும் உணவாகவும், விரைவாக செரிமானம் செய்யும் உணவாக சிறுதானியங்கள் உள்ளன. வறட்சியை தாங்கி அதிக மகசூல் தரும் சிறுதானியங்கள் பயிர் செய்தால், விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் பயிராக சிறுதானியங்கள் விளங்குகின்றன' என்றார்.